بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 43

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

21 ரபீவுல் அவ்வல் 1443 ஹிஜ்ரி கமரி 28 இஹா 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 28 அக்டோபர் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّمَا یُرِیۡدُ الشَّیۡطٰنُ اَنۡ یُّوۡقِعَ بَیۡنَکُمُ
الۡعَدَاوَۃَ وَالۡبَغۡضَآءَ فِی الۡخَمۡرِ
وَالۡمَیۡسِرِ وَیَصُدَّکُمۡ عَنۡ ذِکۡرِ اللّٰہِ
وَعَنِ الصَّلٰوۃِ ۚ فَہَلۡ اَنۡتُمۡ مُّنۡتَہُوۡنَ

போதைப் பொருள்கள் சூதாட்டம் ஆகியவற்றால் உங்களுக்கிடையே பகையையும், வெறுப்பையும் உருவாக்கி அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவே ஷைத்தான் விரும்புகின்றான். எனவே நீங்கள் (இவற்றிலிருந்து) தவிர்ந்து கொள்ள மாட்டீர்களா? (5:92)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**உண்மையில் மனிதன் பொய்யை கைவிடாத வரை அவனால் தூயவனாக ஆக முடியாது. பொய் இல்லாமல் வாழ்க்கையை கழிக்க முடியாது என்று உலகவாதிகள் கூறுகின்றனர். இது ஓர் அறிவீனமான கூற்றாகும்**

**எந்த மக்கள் தமது வலிமையின் மீது நம்பிக்கை கொள்கின்றார்களோ மேலும் இறைவனை விட்டு விடுகின்றார்களோ அவர்களின் முடிவு நல்லதாக இருப்பதில்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### பொய்யை கைவிடாமல் மனிதனால் தூயவனாக ஆக முடியாது

உண்மையில் மனிதன் பொய்யை கைவிடாத வரை அவனால் பரிசுத்தமானவனாக ஆக முடியாது. பொய் இல்லாமல் வாழ்க்கையை கழிக்க முடியாது என்று தீய உலகவாதிகள் கூறுகின்றனர். இது ஓர் அறிவீனமான கூற்றாகும். உண்மையைக் கொண்டு வாழ்க்கையை கழிக்க முடியாதென்றால் பொய்யின் மூலம் ஒருபோதும் கழிக்க முடியாது. வேதனை என்னவென்றால், இந்த தீய மக்கள் இறைவனை கண்ணியப்படுத்துவதில்லை. இறைவனது அருளின்றி வாழ்க்கையை கழிக்க முடியாது என்பதை அவர்கள் அறிவதில்லை. அவர்கள் தங்களது இறைவனாகவும், கஷ்டங்களை அகற்றக்கூடிய வழிமுறையாகவும் பொய் எனும் அசுத்தத்தை கருதுகின்றனர். எனவே இறைவன் பொய்யை சிலைகளின் அசுத்தத்துடன் தொடர்புபடுத்தி திருக்குர்ஆனில் கூறியுள்ளான். நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள். நாம் ஓர் அடி அல்ல. இறைவனின் அருள் இன்றி ஒரு மூச்சு கூட வாங்க முடியாது. நமது உடலில் என்னென்ன சக்திகள் உள்ளன? ஆனால் நாம் நமது வலிமையைக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது.

### இறைவன் மீது நம்பிக்கை கொள்வதன் பொருள்

எந்த மக்கள் தமது ஆற்றலின் மீது நம்பிக்கை கொள்கின்றார்களோ மேலும் இறைவனை கைவிட்டு விடுகின்றார்களோ அவர்களின் முடிவு நல்லதாக இருப்பதில்லை. கை, கால்களை கட்டிக் கொண்டு அமர்ந்து விடுவது இறைவன் மீது நம்பிக்கை வைப்பது என்பதன் பொருளல்ல. காரணிகளை பயன்படுத்துவதும், இறைவனால் வழங்கப்பட்ட ஆற்றல்களைக் கொண்டு

(தொடர்ச்சி கடைசி பக்கம்.....)

## நபிமொழி

**மிஸ்கீன் என்பதன் பொருள்**

1476: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓரிரு கவளம் உணவுக்காக (வீடுவீடாக சென்று) யாசிப்பவன் ஏழையல்லன்; மாறாக தேவையுடையவராக இருந்து கொண்டு (பிறரிடம் கேட்க) வெட்கப்படுபவரும், மக்களை பின்தொடர்ந்து சென்று யாசிக்காதவருமே ஏழையாவார்.

**பொருட்களை வீணாக்குவதையும், அதிகமாக யாசிப்பதையும் அல்லாஹ் விரும்பவில்லை**

1477: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நீங்கள் கேட்ட ஒரு ஹதீஸை எனக்கு எழுதி அனுப்புங்கள் என ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முகீரா பின் ஷுஅபா (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அதற்கு, நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு மூன்று விஷயங்களை வெறுக்கிறான். பயனற்ற விஷயங்களை பேசுவதும், பொருட்களை வீணாக்குவதும், அதிகமாக (பிறரிடம்) யாசிப்பதும் (அந்த மூன்று விஷயங்கள் ஆகும்) என்று ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களுக்கு பதில் எழுதினார்கள்.

(புகாரி தொகுதி 3 கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**சொர்க்கம் சோம்பேறிகளின் சத்திரமல்ல. மாறாக, அதில் தங்கக்கூடியவர்கள் பணி செய்வார்கள். அவர்கள் பணி செய்ய மாட்டார்கள் என்றால் சோர்வை மறுத்துக் கூறுவதற்கு என்ன அவசியம் உள்ளது? உணர்ச்சிகளின் ஈர்ப்புகளிலிருந்து விலகி மனிதன் தனது இறைவணக்கங்களில் முற்றிலும் இன்பத்தை உணர்வான் என்பதே சொர்க்கத்தின் சாரம்சமாகும்**

لَا یَمَسُّہُمۡ فِیۡہَا نَصَبٌ وَّمَا ہُمۡ مِّنۡہَا بِمُخۡرَجِیۡنَ (15:49)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அவர்களுக்கு சொர்க்கத்தில் எந்த வகையான களைப்பும் ஏற்படாது. மேலும் அவர்கள் அதிலிருந்து வெளியேற்றப்படவும் மாட்டார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். சொர்க்கத்திலும் மனிதன் பணி செய்வான் என்று இதில் கூறப்பட்டுள்ளது. ஆனால் வித்தியாசம் என்னவென்றால், அங்கு அழிவு இருக்காது. ஏனென்றால் சோர்வு என்பது அழிவின் அடையாளமாக உள்ளது. மனித உடலின் சில துகள்கள் கொழுப்பு அல்லது வேறு பயனுள்ள கூறுகள் வெளியேறி விட்டன என்பதே சோர்வின் பொருளாக அமைகின்றது. பணிகளை கைவிடுவதற்கும், ஓய்வெடுப்பதற்கும் மனித இயல்பின் அறிவிப்பே சோர்வாகும். அல்லது உணவை உண்பதற்கான தேட்டத்தின் அறிவிப்பாகும். கையின் ஓர் அசைவால் மனித உடலின் பல மில்லியன் செல்கள் வீணாகி விடுகின்றன என்று நான் ஒரு மருத்துவ நூலில் படித்தேன். எனவே சில காலம் பணி செய்த பிறகு சோர்வு உணரப்படும்பொழுது அது இந்த விஷயத்திற்கு அறிகுறியாக அமைந்துள்ளது. அதாவது உடலிலிருந்து ஏராளமான ஆற்றல்கள் வீணாகி விட்டன. தற்போது இந்த பாதிப்பிற்கு நிவாரணம் செய்து கொள்ளுங்கள். எனவே சோர்வு என்பது அழிவின் அடையாளமாகும். அங்கு (சொர்க்கத்தில்) சோர்வு இருக்காது என்று கூறி உடலில் மாற்றங்கள் இருக்காது என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து இதுவும் நமக்கு தெரிய வருகின்றது. அதாவது உடலில் ஏற்படும் சோர்வை நீக்கும் பணியை (இவ்வுலகில்) உணவு செய்கின்றது. ஆனால் அங்கு (சொர்க்கத்தில்) அழிந்து போன விஷயங்களை மீண்டும் நிலைநாட்டும் பணியை உணவு செய்யாது. மாறாக, மேலும்

(தொடர்ச்சி 10 வது பக்கம்.....)

## இந்த இதழில்

*திருக்குர்ஆன்*
*நபிமொழி*
*மல்ஃபூஸாத்*
*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*
*குத்பா பேருரை 24 செப்டம்பர் 2021 (முழுவதுமாக)*
*கேள்வி–பதில்: ஹுஸூர் (அய்ய)*
*ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் இந்தோனேஷிய வாக்கிஃபாதே நவ் பிள்ளைகளின் காணொலி சந்திப்பு*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**இஸ்லாமிய மக்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் தனது வாக்குறுதியை உண்மைப்படுத்திக்காட்டி விட்டான். அவன் எதிரிகளுக்கு எதிராக உங்களுக்கு உதவி செய்தான். மேலும் அவர்களின் நாடுகளுக்கு உங்களை வாரிசுகளாக்கி விட்டான். மேலும் உங்களுக்கு பூமியில் வலிமை வழங்கி விட்டான். எனவே உங்களது இறைவனின் அருட்கொடைகளுக்கு நீங்கள் நன்றி செலுத்த வேண்டும். நீங்கள் கட்டுப்படாமையைக் கொண்ட பணிகளிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஏனென்றால் கட்டுப்படாமையை கொண்ட செயல் அருட்கொடைகளுக்கு செய்கின்ற நன்றிகேடாகும். அல்லாஹ் ஒரு சமுதாயத்தின் மீது அருள் புரிந்து அந்த சமுதாயம் நன்றிகேடு காட்டுவதென்பது மிகக் குறைவாகவே நடந்துள்ளது. அவர்கள் விரைவாக தவ்பா செய்யவில்லையென்றால் பின்னர் நிச்சயம் அவர்களின் கண்ணியம் அழிக்கப்பட்டு விடும். அதாவது நன்றிகேடு காட்டிய பிறகு தவ்பா செய்யவில்லையென்றால் பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட கண்ணியம் அழிக்கப்பட்டு விடும் (ஹஸ்ரத் உமர் (ரலி))**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஏலியா பயணம், பைத்துல் முகத்தஸ் வெற்றி மற்றும் ஹிர்குல் புறமிருந்து ஹிம்ஸ் முற்றுகை ஆகியவற்றைக் குறித்த விரிவான விளக்கம்**

**மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்புகளும், ஜனாஸா காயிப் தொழுகையும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 செப்டம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **24 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தின் நற்குறிப்பு நடைபெற்று கொண்டிருந்தது. இன்று அதன் தொடர்ச்சியாக 15 ஆம் ஹிஜ்ரியில் நடைபெற்ற பைத்துல் முகத்தஸ் வெற்றி குறித்து எடுத்துரைக்கப்படும்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் தலைமையில் இஸ்லாமிய படை பைத்துல் முகத்தஸை முற்றுகையிட்டது. அப்போது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் படையும் அவர்களுடன் இணைந்து கொண்டது. கோட்டை முற்றுகையிடப்பட்டதன் காரணமாக நெருக்கடிக்கு உள்ளாகி கிறிஸ்துவர்கள்சமாதானத்திற்கு முன் வந்தார்கள். ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே வந்து சமாதான உடன்படிக்கை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையை வைத்தார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இது குறித்து தகவல் கொடுத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் செல்வதற்கு ஆலோசனை வழங்கினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரின் ஆலோசனையை விரும்பினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமனம் செய்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதாவது அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அமீராக நியமனம் செய்திருந்தார்கள். இதன் பிறகு அன்னார் (ரலி) அவர்கள் பைத்துல் முகத்தஸிற்கு புறப்பட்டு விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த பயணம் ஒரு சாதாரண பயணமாக இருக்கவில்லை. இதன் நோக்கம் எதிரிகளின் உள்ளங்களில் இஸ்லாமிய திகில் மற்றும் அழுத்தத்தை ஏற்படுத்துவதாகும்.

அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அன்னார் புறப்பட்டபோது உலக அரசர்களைப் போன்று எந்தவொரு ஆடம்பரமும் இருக்கவில்லை. எந்தவொரு படையும் அன்னாருடன் செல்லவில்லை. எந்த அளவுக்கென்றால் ஒரு சாதாரண கூடாரம் கூட அன்னாருடன் இருக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு குதிரையில் சவாரி செய்தார்கள். மேலும் அன்னாரின் தோழர்களாக முஹாஜிர்களும் அன்ஸார் சகோதரர்களும் இருந்தனர்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் ஒரேயொரு அடிமையும், உண்பதற்கு சிறிது சத்துவும், ஒரு மரத்தாலான பாத்திரமும் மட்டுமே இருந்தது. ஒட்டகத்தில் சவாரி செய்தார்கள். ஆனால் அவ்வாறிருந்த பிறகும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து பைத்துல் முகத்தஸ் செல்வதற்கு எண்ணம் கொண்டு விட்டார்கள் என்ற செய்தி எங்கெல்லாம் சென்றடைந்ததோ அங்கு பூமி அதிர்ந்து விட்டது.

(தாரீக் இப்னு ஹுல்தூம் மொழியாக்கம் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 207 – 2009 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இந்த விஷயத்தை விளக்கியவாறு பயணத்தின் ஒரு சுருக்கமான நிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் விளக்கம் இல்லை. எவ்வாறிருப்பினும் ஏலியா ஒரு நகரமாக இருந்தது. அதில் பைத்துல் முகத்தஸ் அமைந்திருந்தது. அதை யார் முற்றுகையிட்டிருந்தார்? மேலும் யார் பைத்துல் முகத்தஸிற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வரும்படி விண்ணப்பித்திருந்தார்? இது குறித்து தப்ரி (வரலாற்று) நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்கள். அதில் உதவி(ப்படை)யை அனுப்பும்படி விண்ணப்பித்திருந்தார்கள். அப்போது அம்ர் அவர்கள் இந்த ஆலோசனையையும் முன் வைத்திருந்தார்கள். அதாவது எனக்கு மிகக் கடுமையான போர்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இன்னும் போர் புரிய வேண்டிய ஏராளமான நகரங்கள் உள்ளன. தங்களின் வழிகாட்டலுக்கு நான் காத்திருக்கின்றேன் என்றும் கடிதத்தில் அன்னார் எழுதியிருந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் இந்தக் கடிதம் கிடைத்தபோது ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் முழுமையான விஷயத்தை அறிந்து கொண்ட பிறகே இதனை எழுதியுள்ளார் என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு மத்தியில் தனது பயணத்தை அறிவிப்பு செய்து வைத்தார்கள். மேலும் பயணத்திற்காக புறப்பட்டுச் சென்று விட்டார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பாகம் 2 பக்கம் 804 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

தப்ரியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மாலையில் வருகை தந்தது தொடர்பாக இந்த விஷயமும் எழுதப்பட்டுள்ளது. அதாவது அதற்கான காரணம் உண்மையில் இதுவாக இருந்தது. ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் பைத்துல் முகத்தஸ் வந்தடைந்ததும் அங்குள்ள மக்கள் அவர்களிடம் ஏனைய நகரங்களுடன் சமாதான உடன்படிக்கைக்கேற்ப சமாதானம் செய்து கொள்ள விரும்பினர். மேலும் இந்த உடன்படிக்கையில் முஸ்லிம்கள் புறமிருந்து தலைவர் என்ற ரீதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் பங்கு பெற வேண்டும் என்பது அவர்களின் ஆசையாக இருந்தது. ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு புறப்பட்டு விட்டார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 449 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 348 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் அறிவிப்பில் சில வரலாற்று ஆய்வாளர்களுக்கு திருப்தி இல்லை.

முஹம்மது ஹுஸைன் ஹேகல் என்பவர் இதன் அடிப்படையில் இவ்வாறு எழுதுகின்றார். நாம் இந்த அறிவிப்பை உண்மைக்கு அப்பாற்பட்டதாக கருதுவதும் அவசியமாகும். இந்த அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. அதாவது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அல்லது ஹஸ்ரத் அபூஉபைதா பின் ஜராஹ் (ரலி) ஆகியோர் தனியாகவோ அல்லது சேர்ந்தோ பைத்துல் முகத்தஸை முற்றுகையிட்டார்கள். திப்ரி இப்னு அஸீர் மற்றும் இப்னு கஸீர் போன்றவை அதனை பதிந்துள்ளன. தபரி அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவிற்கு வந்ததன் காரணம் என்னவாக இருந்தது என்றால் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் பைத்துல் முகத்தஸை முற்றுகையிட்டிருந்தார்கள். அப்போது சிரியாவின் ஏனைய பகுதிகளின் குடிமக்களுடன் செய்யப்பட்டடிருந்த சமாதான உடன்படிக்கைகளின் அதே நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென நகரவாசிகள் வேண்டினர். அதற்காக விண்ணப்பிக்கப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே வருகை தந்து சமாதான உடன்படிக்கை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை மட்டுமே கூடுதலாக அவர்கள் சேர்த்துக் கொண்டனர். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் இந்த தகவலை கிலாஃபத்தின் அவைக்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து புறப்பட்டு விட்டார்கள்.

இந்த அறிவிப்பை நாம் உண்மைக்கு எதிரானதாக கருதுகின்றோம். அதாவது பைத்துல் முகத்தஸ் முற்றுகையிடப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் காலித் (ரலி) ஆகியோர் ஹிம்ஸ், கலப், அன்தாகியா மற்றும் அதன் சுற்று வட்டாரங்களிலிருந்த நகரங்களின் வெற்றிகளில் மும்முரமாக இருந்தனர். ஹிர்குல், அவர்களுக்கெதிராக ருஹா என்ற இடத்தில் அமைந்திருந்த படையை ஒன்றுகூட்டிக் கொண்டிருந்தான். மேலும் அவர்களை வந்த வழிக்கே திரும்பிச் செல்லும்படி நிர்ப்பந்திக்க படைகளை ஒன்று கூட்டினான். இந்த அனைத்து சம்பவங்களும் பைத்துல் முகத்தஸ் முற்றுகையிடப்பட்டதுபோன்று ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டில் அதாவது கி.பி 636 ஆம் ஆண்டு நடைபெற்றதாகும். பைத்துல் முகத்தஸ் முற்றுகையானது பல மாதங்கள் வரை நீடித்தது. இந்த இரண்டு படைத்தளபதிகளும் சிரியாவில் தனியாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் ஹிர்குலை தனது தலைநகரிலேயே அடைக்கலம் தேடுமாறு நிர்ப்பந்தித்து விட்டார்கள். அதுபோன்ற நிலையில் அவர்கள் இருவரும் அங்கு மும்முரமாக இருந்தார்கள். இவர்களில் ஒருவர் அல்லது இருவர் பைத்துல் முகத்தஸை முற்றுகையிட்டார்கள் என்று கூறுவது எந்த வகையிலும் பொருத்தமானதாக தெரியவில்லை. எனவே இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும்.

தற்போது இந்த ஓர் அறிவிப்பு மட்டுமே எஞ்சியிருக்கின்றது. தப்ரி அவர்கள் முன்னரும் இது தொடர்பாக எழுதியுள்ளார்கள். பைத்துல் முகத்தஸ் முற்றுகையை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களே செய்திருந்தார்கள். அது ஒரு நீண்ட காலம் வரை தொடர்ந்திருந்தது. மேலும் பைத்துல் முகத்தஸ் வாசிகள் மிகவும் உத்வேகத்துடனும், மிகக் கடுமையுடனும் முஸ்லிம்களுடன் போர் புரிந்தனர். இந்த அறிவிப்பே எம்மைப் பொறுத்தவரை சரியானதாக உள்ளது. எனவே இவர் இந்த கருத்தில் உடன்படுகின்றார். அதாவது நடந்து கொண்டிருந்த போரிலிருந்து இது வெளிப்படுகின்றது. அதாவது பைத்துல் முகத்தஸ் பல்வேறு காலகட்டங்களில் எல்லா வகையான தாக்குதலுக்கும் ஆளானது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 365, 366 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

முஹம்மது ஹுஸைன் ஹேகல் தொடர்ந்து எழுதுகின்றார்: ஆச்சரியம் என்னவென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சமாதான உடன்படிக்கையை முழுமை செய்வதற்கும், உடன்படிக்கை மடலை செயல்படுத்துவதற்காக மட்டுமே படையுடன் சென்றார்கள் என்பது ஆச்சரியம் தரக்கூடியதாகும். அதேபோன்று பைத்துல் முகத்தஸ் வாசிகள் சமாதான உடன்படிக்கையை முழுமை செய்வதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து வருகை தர வேண்டுமென்று கோரிக்கை வைப்பதும் ஆச்சரியம் தருகின்றது. உண்மையில் நாம் அறிவோம். மதீனாவிலிருந்து ஒரு பயணக் குழு தொடர்ந்து பயணம் செய்து அவர்களை நோக்கி வந்தால் முழுமையாக மூன்று வாரங்கள் ஆகிவிடும்.

எனவே இவர் கூறுகின்றார்: முற்றுகை நீண்டதன் மூலமும், எதிரியின் வலிமையை குறிப்பிட்டு உதவி வேண்டி எழுதிய ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் கடிதங்களிலிருந்தும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பொறுமை எல்லையை கடந்திருந்தது. எனவே அன்னாரிடம் புது படை வேண்டப்பட்டபோது அத்துடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் புறப்பட்டு விட்டார்கள். ஜாபிஆ என்ற இடத்தில் தங்கினார்கள். அந்த இடம் சிரியா பாலைவனம் மற்றும் உர்தன் நிலப்பரப்புக்கு மத்தியில் அமைந்துள்ளது. இதற்கிடையில் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும் சிரியாவை வெற்றி கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அந்த இருவரையும் ஜாபிஆ வந்து சந்திக்குமாறு கட்டளையிட்டிருந்தார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்களிடமும், படையின் ஏனைய தலைவர்களிடமும் ஆலோசனை செய்த பிறகு பைத்துல் முகத்தஸின் திட்டத்தை முழுமை செய்வதற்கு மிகச் சிறந்த வழிமுறையை தேட வேண்டும் என்று விரும்பினார்கள்.

அக்ரபூன் மற்றும் ஸஃப்ரநியூஸ் ஆகியோருக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வருகை குறித்து தகவல் கிடைத்தது. இங்கு பெயர்களில் கருத்து வேறுபாடு உள்ளது. அரபி புத்தகங்களில் இந்தப் பெயர் அர்கபூன் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் ஹேகலைப் பொறுத்தவரை அது சரியானதல்ல. அவரது ஆய்வின் அடிப்படையில் அந்தப் பெயர் அத்ரபூன் ஆகும். ஸஃப்ரநியூஸின் பெயர் ஸஃப்ரமினியூஸ் என்று எழுதப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு வழியை தேடுவதற்காக சென்றார்கள். அதாவது என்ன திட்டத்தை உருவாக்குவது என்பதற்காக (அவர்களை) ஒன்றுகூட்டி இருந்தார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் காலித் (ரலி) ஆகியோரின் கரங்களில் சிரியாவின் வெற்றி குறித்த தகவலும் கிடைத்திருந்தது. எனவே பைத்துல் முகத்தஸில் ஆட்சியை நீண்ட நேரம் வரை நிலைநிறுத்த முடியாது. அதாவது தொடர்ந்து போரிடுவது கடினமாகும் என்பதை எதிரிகளின் இந்த இரண்டு தலைவர்களும் புரிந்து கொண்டனர். எனவே அக்ரபூன் என்பவன் சில படையை அழைத்துக் கொண்டு மௌனமாக எகிப்தில் நுழைந்து விட்டான். மேலும் வயதான பாதிரி தனது பாதுகாப்பிற்காக நிம்மதியடைந்தவாறு முஸ்லிம்களுடன் சமாதானத்திற்கான பேச்சு வார்த்தையை தொடங்கி இருந்தார். ஏனென்றால் அமீருல் மூமினீன் ஜாபிஆவில் தங்கி இருக்கின்றார்கள். ஜாபிஆ வரை வந்து விட்டார்கள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். எனவே சமாதான உடன்படிக்கை எழுதுவதற்காக அன்னார் சுயமே வருகை தர வேண்டும் என்ற நிபந்தனையை அவர் முன் வைத்து விட்டார். ஜாபிஆ மற்றும் பைத்துல் முகத்தஸ் இடையே அதிக தூரம் கிடையாது. ஸஃபரநியூஸின் இந்த விண்ணப்பத்திற்கு பதிலாக தொலைவை ஒரு காரணம் காட்ட முடியாமல் இருந்தது.

எனவே அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இதனையே சரியானதாக கருதுகின்றேன். மேலும் சிரியா மற்றும் பாலஸ்தீன் மீதான தாக்குதல் தொடர்பான சம்பவங்களின் தொடர்ச்சியில் இது வரலாற்று ரீதியில் பொருத்தமானதாக உள்ளது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 358, 368 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இந்த கடிதங்கள் கிடைத்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்ன ஆலோசனை செய்தார்கள்? என்பது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது கடிதங்கள் கிடைத்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனைத்து கண்ணியத்திற்குரிய சஹாபிகளையும் ஒன்றுகூட்டி ஆலோசனை செய்தார்கள். கிறிஸ்துவர்கள் தாக்கத்திற்குள்ளாகி நிலைகுலைந்து விட்டார்கள். எனவே அவர்களின் விண்ணப்பத்தை தாங்கள் ரத்து செய்து விடுங்கள். அவ்வாறு செய்தால் அவர்களுக்கு மேலும் இழிவு ஏற்படும். மேலும் முஸ்லிம்கள் அவர்களை மிகவும் இழிவானவர்களாக கருதுகின்றார்கள். நிபந்தனையின்றி அவர்கள் அந்நிலையில் ஆயுதங்களை கீழே போட்டு விடுவார்கள் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இதற்கு மாற்றமான கருத்தை (ஆலோசனையை) தெரிவித்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஏலியா செல்லும்படி ஆலோசனை வழங்கினார்கள்.

முஸ்லிம்கள் குளிர், போர் மற்றும் நீண்ட காலம் தங்கியதன் காரணமாக அசாதாரண கடினங்களை சகித்துள்ளார்கள். தாங்கள் அங்கு சென்றால் அது தங்களுடைய மற்றும் முஸ்லிம்களுடைய அமைதி மற்றும்

ஆரோக்கியத்திற்கு சிறந்ததாக இருக்கும். ஒருவேளை தாங்கள் அவர்களை தங்கள் மீதும் சமாதான உடன்பக்கையின் மீதும் நிராசையடையச் செய்து விட்டால் அது தங்களுக்கு சிறந்ததாக நிரூபணமாகாது. எதிரி கோட்டைக்குள் புகுந்த அமர்ந்து விடுவான். மேலும் அவர்களுக்கு தமது நாட்டிலிருந்தும் ரோமானிய அரசரிடமிருந்தும் உதவிப் படை கிடைத்துக் கொண்டிருக்கும். குறிப்பாக பைத்துல் முகத்தஸ் அவர்களைப் பொறுத்தவரை மிகவும் மகத்துவமிக்கதாகும். அது அவர்களின் புன்னிய ஸ்தலமாகும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்தக் கருத்தை விரும்பினார்கள். மேலும் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

(அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 124 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 369 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

இந்த பயணத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் ஏனைய முஹாஜிர் மற்றும் அன்ஸார் சகோதரர்கள் மட்டுமின்றி ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களும் உடனிருந்தார்கள். இந்தப் பயணம் தொடர்பாக ஓர் அறிவிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. அபூ ஸயீத் மக்பரி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது இந்த பயணத்தில் சுபுஹ் தொழுகையை தொழுத பிறகு தமது தோழர்களுடன் வருகை தந்திருந்தார்கள். மேலும் அவர்களை நோக்கி தமது முகத்தை திருப்பினார்கள். பின்னர் கூறினார்கள்: அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. அவன் நமக்கு இஸ்லாம் மற்றும் ஈமானின் மூலம் கண்ணியம் வழங்கியுள்ளான். முஹம்மது (ஸல்) அவர்களின் மூலமாக நமக்கு கண்ணியம் வழங்கியுள்ளான். மேலும் நம்மை வழிகேட்டிலிருந்து நல்வழிப்படுத்தியுள்ளான். மேலும் குழுக்களாக பிரிந்திருந்தவர்களுக்கு எதிராக நம்மை ஒன்றுகூட்டினான். நமது உள்ளங்களில் அன்பை உருவாக்கினான். மேலும் எதிரிகளுக்கு எதிரில் அன்னார் (ஸல்) அவர்கள் மூலமாக நமக்கு உதவி செய்தான். நம்மை பல்வேறு நகரங்களில் ஆட்சியில் அமரச் செய்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நம்மை பரஸ்பர அன்பு செலுத்தக் கூடியவர்களாகவும், சகோதரர்களாகவும் அல்லாஹ் ஆக்கி விட்டான். எனவே நீங்கள் இந்த அருட்கொடைகளில் அல்லாஹ்வை புகழுங்கள். மேலும் அவனிடம் உதவி தேடுங்கள். மேலும் இந்த அருட்கொடைகளுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி கூறுங்கள். மேலும் எந்த அருட்கொடைகளின் காரணமாக நீங்கள் சுற்றித் திரிகின்றீர்களோ அது தொடர்பாக அல்லாஹ்விடத்தில் இவ்வாறு துஆ செய்யுங்கள். அவன் அந்த அருட்கொடைகளை உங்கள் மீது முழுமை செய்யட்டும். ஏனென்றால் அல்லாஹ் நம் புறமிருந்து கவனத்தை விரும்புகின்றான். நன்றி கூறக்கூடியவர்களுக்கு தனது அருட்கொடைகளை முழுமை செய்ய விரும்புகின்றான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது பயணத்திற்கிடையே துவக்கம் முதல் திரும்பிச் செல்லும் வரை இந்தக் கூற்றை ஒவ்வொரு சுபுஹ் தொழுகையிலும் கூறிக் கொண்டிருந்தார்கள். மேலும் அதனை கைவிட்டு விடவில்லை.

(அல்இக்திஃபா பிமாதஸ்மினா மின் மகாஸி ரஸூலுல்லாஹ் (ஸல்) வ ஸலாஸத்தல் குலஃபா தொகுதி 2 பாகம் 1 பக்கம் 292, 293 – 1997 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம் தலைவர்கள் ஜாபிஆவில் வந்து அன்னாரை சந்திக்கும்படி அவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. தகவலுக்கேற்ப யஸீத் பின் அபீ சுஃப்யான் மற்றும் காலித் பின் வலீத் (ரலி) ஆகியோர் அங்கு வரவேற்றார்கள். சிரியாவில் இருந்து கொண்டு அந்த அதிகாரிகளிடம் அரபின் எளிமை எஞ்சியிருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் இந்த மக்கள் அஞ்சிக் கொண்டு வந்தனர். உடலில் நல்ல ஆடைகளும், முழுப்பொலிவும் இருந்தது. நல்ல வகையான உணவும், வெளிப்படையான அழகும் கம்பீரமும் அவர்களிடம் தென்பட்டிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடுமையான கோபம் வந்தது. குதிரையிலிருந்து இறங்கினார்கள். இந்த அளவிற்கு விரைவாக நீங்கள் அரபி அல்லாதவர்களின் பழக்கங்களை மேற்கொண்டு விட்டீர்களே என்று கடிந்து கொண்டார்கள். அந்த மக்கள் இவ்வாறு கூறினர். அங்கிகளுக்கு கீழ் ஆயுதங்கள் உள்ளன. அதாவது போர் செய்கின்ற அந்த திறமைகளை அவர்கள் கைவிட்டு விடவில்லை. அப்போது, விஷயம் இதுவென்றால் பின்னர் பரவாயில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 124 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

வெளிப்படையான பழக்க வழக்கங்களை நீங்கள் இந்த மக்களுக்கு காட்டுவதற்காக மேற்கொண்டுள்ளீர்கள். ஆனால் அரபுகளின் உள்ளார்ந்த வடிவமே உங்களிடம் நிலைபெற்றுள்ளது. எனவே பரவாயில்லை என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் இந்த விஷயம் இடம் பெற்றுள்ளது. யஸீத் பின் அபீசுஃப்யான் கூறினார்: அமீரூல் மூமினீன் அவர்களே! எங்களிடம் ஆடைகளும், சவாரிகளும் அதிகமாக உள்ளன. எங்களின் வாழ்க்கை மிக அழகியதாக உள்ளது. செல்வம் மிகச் செழிப்பாக உள்ளது. நீங்கள் விரும்பியபடி முஸ்லிம்களின் நிலை உள்ளது. தாங்கள் இந்த வெள்ளை ஆடையை அணிந்து இந்த அழகிய சவாரிகளில் சவாரி செய்தால் மேலும் இந்த அதிகமான தானியங்களிலிருந்து முஸ்லிம்களுக்கும் உண்ணக் கொடுத்தால் அவ்வாறு செய்வது புகழுக்கு காரணமாக அமையும். மேலும் ஆட்சி விவகாரங்களை நிர்வகிப்பதில் தங்களுக்கு அதிக சிறப்பிற்கு காரணியாக அமையும். மேலும் அரபி அல்லாதவர்களின் பார்வையில் தங்களின் மிக அதிக மேன்மைக்கு காரணியாக அமையும்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், யஸீதே! வேண்டாம் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது இரண்டு தோழர்களை விட்டுப் பிரிந்த அந்த அச்சம் மற்றும் நிலையை கைவிட்டு விட மாட்டேன். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோர் ஆவர். நான் அவர்களின் தோழர்களாக இருந்த நிலையிலேயே இருப்பேன். நான் அந்த மக்களுக்காக அழகையும், ஆடம்பரத்தையும் மேற்கொள்ள மாட்டேன். ஏனென்றால் அவ்வாறு செய்வது எனது இறைவனின் பார்வையில் குறையுடையதாக ஆகிவிடும் என்று நான் அஞ்சுகின்றேன். மேலும் மக்களுக்கு மத்தியில் எனது விவகாரம் மகத்துவம் பெற்று அல்லாஹ்விடத்தில் எனது விவகாரம் சிறுமையாகி விடுவதை நான் விரும்பவில்லை. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதே நிலையில் நிலைநின்றார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையில் இருந்த அதே நிலையில் நிலைநின்றார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (அதே நிலையில்) உலகத்தை விட்டு சென்று விட்டார்கள்.

(அல்இக்திஃபா பிமாதஸ்மினா மின் மகாஸி ரஸூலுல்லாஹ் (ஸல்) வ ஸலாஸத்தல் குலஃபா தொகுதி 2 பாகம் 1 பக்கம் 295 – 1997 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்துவர்களுக்கு மத்தியில் சமாதான உடன்படிக்கை எவ்வாறு ஏற்பட்டது? ஏலியா வாசிகளைப் பொறுத்தவரை உடன்படிக்கை எங்கே ஏற்பட்டது? இது தொடர்பாக பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

ஜாபிஆ என்ற இடத்தில் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு மத்தியில் சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஜாபிஆ என்ற இடத்தில் தங்கியிருந்தபோது ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் படைக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது திடீரென குதிரையை வேகமாக ஓட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்த சில சவாரிகள் தென்பட்டனர். அவர்களின் வாள்கள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. முஸ்லிம்கள் உடனடியாக ஆயுதங்களை ஏந்தி விட்டனர். என்ன விஷயம்? என்று ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது மக்கள் சவாரிகளை நோக்கி சைகை செய்தபோது, அச்சப்பட வேண்டாம். இந்த மக்கள் அடைக்கலம் வேண்டி வந்துள்ளனர். இவர்கள் ஏலியாவின் குடிமக்கள் ஆவர் என்று ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் கூறினார்கள். அன்னார் அவர்களிடம் சமாதான உடன்படிக்கையை எழுதிக் கொடுத்தார்கள்.

(தாரீக் தப்ரி மொழியாக்கம் தொகுதி 2 பக்கம் 369, 370 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள நஃபீஸ் அகாடமியில் அச்சிடப்பட்டது & அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 125 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஓர் அறிவிப்பில் உள்ளது. அல்லாமா பலாதரி மற்றும் முஹம்மது ஹுஸைன் ஹேகல் இவ்வாறு எழுதியுள்ளனர்: அதாவது சமாதான உடன்படிக்கை ஜாபிஆ என்ற இடத்திற்குப் பகரமாக ஏலியா என்ற இடத்தில் நடைபெற்றது. இருந்தபோதிலும் முஹம்மது ஹுஸைன் ஹேகல் உடன்படிக்கை ஜாபியாவில் நடைபெற்றிருந்தது என்று தனது புத்தகத்தில் பிறிதோரிடத்தில் எழுதியுள்ளார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள்

எழுதிய செய்துனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 368, 371 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 88 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம்கள் மற்றும் ஏலியாவாசிகளுக்கு மத்தியில் நடைபெற்றிருந்த சமாதான உடன்படிக்கையின் வாசகம் தப்ரி (வரலாற்று) நூலில் இவ்வாறு பதியப்பட்டுள்ளது.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். இது அல்லாஹ்வின் அடியாரான அமீருல் மூமினீன் உமர் (ரலி) ஏலியாவாசிகளுக்கு வழங்கிய அடைக்கலம் ஆகும். அவர்களின் உயிர்களுக்கும், செல்வங்களுக்கும், தேவாலயங்களுக்கும், சிலுவைகளுக்கும், நோயாளிகளுக்கும், ஆரோக்கியமானவர்களுக்கும் மேலும் அவர்களின் முழு சமுதாயத்திற்கும் அடைக்கலம் வழங்கப்படுகின்றது. எவரும் அவர்களின் தேவாலயங்களில் தங்க மாட்டார். மேலும் அவை எதுவும் உடைக்கப்படாது. மேலும் அவர்களின் தேவாலயங்களின் சுற்று வட்டாரங்களில் எந்தக் குறைவும் செய்யப்படாது. மேலும் அவர்களின் சிலுவைகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தப்படாது. அவர்களின் செல்வங்களுக்கும் எந்த சேதமும் ஏற்படுத்தப்படாது. மார்க்க விவாரங்களில் அவர்கள் மீது எந்த பலவந்தமும் செய்யப்படாது. அவர்களில் எவருக்கும் துன்பம் தரப்படாது. ஏலியாவில் அவர்களுடன் எந்தவொரு யூதரும் தங்க மாட்டார். ஏலியாவாசிகள் மீது கடமை என்னவென்றால், அவர்கள் மற்ற நகர்ப்புற வாசிகளைப் போன்று ஜிஸ்யா வரி செலுத்த வேண்டும். மேலும் ரோமானியர்கள் மற்றும் குழப்பவாதிகளை ஏலியாவிலிருந்து வெளியேற்றி விட வேண்டும். எனவே எவர் அவர்களிடமிருந்து வெளியேறுவாரோ அவரின் செல்வத்திற்கும், உயிருக்கும் அடைக்கலம் வழங்கப்படும். அதாவது அவர் பாதுகாப்பான இடத்தை அடையும் வரை அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படும். அவர்களில் எவர் ஏலியாவில் தங்க விரும்புகின்றாரோ அவர் பாதுகாப்பில் இருப்பார். ஏலியாவாசிகளைப் போன்று அவருக்கு ஜிஸ்யா வரி செலுத்த நேரிடும்.

ஏலியாவாசிகளில் எவர் தனது உயிரையும், செல்வத்தையும் எடுத்துக் கொண்டு ரோமானியர்களின் பக்கம் செல்ல விரும்புகின்றாரோ மேலும் தமது வணக்கஸ்தலங்களையும், சிலுவைகளையும் விட்டு விட்டுச் செல்கின்றாரோ அத்தகைய நபர்களின் உயிர்களும், அவர்களின் வணக்கஸ்தலங்களும், அவர்களின் சிலுவைகளும் பாதுகாப்பின் கீழ் இருக்கும். அவர் அதனை. விட்டு விட்டுச் சென்றாலும் கூட எந்த பாதிப்பும் ஏற்படுத்தப்படாது. எந்த அளவுக்கென்றால் அவர் தமது பாதுகாப்பான இடத்தை அடையும் வரை அடைக்கலத்தின் கீழ் இருப்பார். ஏலியாவில் போருக்கு முன்பாக விவசாயிகளாக இருந்தவர்களில் தமது விளை நிலங்களில் தங்கியிருக்க எவரும் விரும்பினால் அவர் ஏலியாவாசிகளைப் போன்று ஜிஸ்யா வரி செலுத்த வேண்டும். எவர் ரோமானியர்களுடன் செல்ல விரும்புகின்றாரோ அவர் சென்று விடட்டும். எவர் தமது குடும்பத்தினரிடம் திரும்பி வர விரும்புகின்றாரோ அவர் திரும்பி வந்து கொள்ளட்டும். அவர்களின் பெயர்களில் அறுவடை நடந்து விடாதவரை அவரிடமிருந்து எந்த ஜிஸ்யா வரியும் பெறப்படாது. அதாவது வருமானம் வந்த பிறகு அவர்களிடமிருந்து ஜிஸ்யா பெறப்படும். இந்த உடன்படிக்கையில் உள்ளவற்றின் மீது அல்லாஹ்வின் வாக்குறுதி உள்ளது.

மேலும் அவர்கள் மீது கடமையாக்கப்பட்ட ஜிஸ்யாவை அவர்கள் செலுத்தி வரும் வரை அல்லாஹ்வின் தூதரும், கலீஃபாக்களும், நம்பிக்கையாளர்களும் அதற்கு பொறுப்பாளர்களாக உள்ளனர்.

இந்த உடன்படிக்கையில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி), ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் முஆவியா பின் அபூசுஃப்யான் (ரலி) ஆகியோரின் சாட்சியங்களும் பதியப்பட்டிருந்தன.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 449 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு கல்தூன் வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கைகளிலிருந்து சில விஷயங்கள் நிரூபணமாகின்றன. ஒன்று. முஸ்லிம்கள் தமது மார்க்கத்தை வாளின் அழுத்தத்தால் பரப்பவில்லை. இரண்டு. அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏனைய மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கு மிக அதிகமான மார்க்க சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. மூன்று, அந்நிய சமுதாயங்களிடமிருந்து பலவந்தமாக ஜிஸ்யா வரி பெறப்படவில்லை. அவர்கள் தங்கியிருப்பதற்கும், ஜிஸ்யா வரி வழங்குவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இரண்டு நிலைகளிலும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

(தாரீக் இப்னு கல்தூன் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 208 – 2009 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இந்த சமாதான உடன்படிக்கை குறித்த செய்தி ரம்லகூ வாசிகளுக்கு கிடைத்தபோது அவர்களும் அமீருல் மூமினீன் அவர்களுடன் இதேபோன்ற உடன்படிக்கை செய்து கொள்வதற்கு நிம்மதியிழந்து விட்டனர். இதே நிலை தான் பாலஸ்தீனத்தின் ஏனைய மக்களின் நிலையாகவும் இருந்தது. ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் சார்பாக லுத் வாசிளுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருந்தது. அதில் முஸ்லிம்களின் கட்டுப்படுதலை ஒப்புக் கொண்டு விட்ட மக்களின் நகரங்களும், இந்த கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. அக்கடிதத்தில் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் லுத் வாசிகளின் உயிர், செல்வம், சிலுவை, ஆரோக்கியமானவர், நோயாளி மற்றும் அனைத்து மார்க்கத்திற்கும் அடைக்கலம் வழங்கியிருந்தார்கள். மேலும் சிரியா நகரவாசிகளைப் போன்று ஜிஸ்யா வரி செலுத்துவார்களென்றால் அவர்கள் மீதும் அவர்களின் மார்க்கத்தின் மீதும் பலவந்தம் செய்யப்பட மாட்டாது. கருத்து வேறுபாடு கொண்ட கொள்கைகளின் காரணமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படுத்தப்பட மாட்டாது.

இந்த அனைத்துப் பணிகளையும் முடித்து விட்டு அமீருல் மூமினீன் அவர்கள் பாலஸ்தீனத்தில் இரண்டு ஆட்சியாளர்களை நியமனம் செய்தார்கள். நாட்டின் பாதி பாதிப் பகுதிகளை இருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். எனவே அல்கமா பின் ஹகீம் அவர்களின் அரசாங்கத்தின் தலைநகரம் ரம்லா என அறிவிக்கப்பட்டது. ஏலியா, அல்கமா பின் முஜஸ்ஸின் தலைநகரமாக நிர்ணயிக்கப்பட்டது.

முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்துனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 373 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் பைத்துல் முகத்தஸிற்கு வருகை தந்தார்கள். இது குறித்து வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் ஏலியாவாசிகளுக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் வழங்கி ஏலியாவில் படையை நிறுத்தியபோது அன்னார் ஜாபிஆவிலிருந்து பைத்துல் முகத்தஸை நோக்கி சென்று விட்டார்கள். அன்னார் குதிரையில் சவாரி செய்திருந்தபோது தனது குதிரையின் பாதங்களில் வலி இருப்பதன் காரணமாக அதனால் நேராக செல்ல முடியவில்லை என்பதை அன்னார் உணர்ந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களுக்காக துருக்கி நாட்டு குதிரை ஒன்று கொண்டு வரப்பட்டது. அதன் மீது ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் சவாரி செய்து அதை செலுத்த தொடங்கினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அதிலிருந்து இறங்கி வந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் சில நாட்கள் கழிந்த பிறகு அன்னார் பயணத்தை கைவிட்டிருந்த தமது அந்த குதிரையை கொண்டுவரும்படி கூறினார்கள். அதற்கான சிகிச்சை நடைபெற்று வந்தது. பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் அதன் மீது சவாரி செய்தார்கள். எந்த அளவுக்கென்றால் பைத்துல் முகத்தஸை வந்தடைந்தார்கள்.

(தாரீக் தப்ரி மொழியாக்கம் செய்யது முஹம்மத் இப்ராஹீம் நத்வி தொகுதி 2 பாகம் 2 பக்கம் 809 – 2003 ஆம் ஆண்டு தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

பைத்துல் முகத்தஸ் அருகில் வந்தவுடன் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) மற்றும் படைத்தலைவர்கள் வரவேற்பதற்காக வந்திருந்தனர். ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களின் ஆடையும், இதர பொருட்களும் முற்றிலும் எளிமையாக இருந்தன. எனவே இதைக் குறித்து கிறிஸ்துவர்கள் என்ன கூறுவார்களோ? என்று எண்ணி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு விலை உயர்ந்த ஆடைகளை வழங்கினர். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் இறைவன் எமக்கு கண்ணியம் வழங்கியுள்ளான். அது இஸ்லாத்தின் கண்ணியமாகும். எமக்கு அதுவே போதுமானதாகும் என்று கூறினார்கள்.

கிறிஸ்துவ பாதிரிமார்கள் சுயமே நகரத்தின் சாவிகளை ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். முதலில் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் மஸ்ஜித் அக்ஸாவிற்கு சென்றார்கள். பின்னர் கிறிஸ்துவர்களின் தேவாலயத்திற்கு சென்றார்கள். மேலும் அதனை பார்வையிட்டார்கள். ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் கிறிஸ்துவர்களின் தேவாலயத்தை சுற்றிப் பார்த்தார்கள். தொழுகைக்கான நேரம் வந்தவுடன் கிறிஸ்துவர்கள் தேவாலயத்தில் தொழுகையை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

நிறைவேற்ற அனுமதி வழங்கினார்கள். ஆனால் எதிர்கால சந்ததிகள் இதனை ஆதாரமாக எடுத்துக் கொண்டு கிறிஸ்துவ வணக்க ஸ்தலங்களில் வரம்பு மீறுதல் செய்துவிடக் கூடாது என்று எண்ணி வெளியே வந்து தொழுகையை நிறைவேற்றினார்கள். ஏலியாவில் தங்கியிருந்தபோது முஸ்லிம் படைகளின் அமீர்மார்கள் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களுக்கு விருந்து கொடுக்கத் தொடங்கி விட்டனர். உணவை தயாரித்து விட்டு எங்களது கூடாரத்திற்கு வருகை தாருங்கள் என்று ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களிடம் அவர்கள் விண்ணப்பித்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் அவர்களுக்கு கண்ணியம் வழங்கியவாறு அவர்களின் விருந்திற்கான அழைப்பை ஒப்புக் கொண்டார்கள். இருந்தபோதிலும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களுக்கு விருந்தளிக்கவில்லை. அப்போது ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் உங்களைத் தவிர படையின் அமீர்மார்களில் எனக்கு விருந்தளிக்காத எந்த அமீரும் இல்லையே? என்று ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் அன்னார் (ரலி) கேட்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! நான் இந்த விஷயத்திற்காக அஞ்சுகின்றேன். அதாவது நான் உங்களுக்கு விருந்து அளித்தால் தங்களால் தங்களின் கண்களை கட்டுப்பாட்டில் வைக்க முடியாது என்று நான் அஞ்சுகின்றேன். அதாவது தாங்கள் உணர்ச்சிவயப்பட்டு விடுவீர்கள் என்று கூறினார்கள். இதன் பிறகு ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் அன்னாரின் கூடாரத்திற்குள் சென்றார்கள். அப்போது அங்கு எதுவுமே இல்லை என்பதை அன்னார் கண்டு கொண்டார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் குதிரையின் குளம்புகளைத் தவிர வேறு எதுவும் அன்னாரிடம் இருக்கவில்லை. அதுவே அன்னாரின் படுக்கையாகவும், அன்னாரின் தலையணையுமாகவும் இருந்தது. அவர்களின் கூடாரத்தின் ஒரு மூலையில் காய்ந்த ரொட்டிகள் இருந்தன. ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் அதனை எடுத்து வந்தார்கள். பின்னர் அதனை நிலத்தில் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டார்கள். பின்னர் உப்பையும், தண்ணீர் இருந்த மண் பானையையும் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் இந்த காட்சியைக் கண்டபோது அழத் தொடங்கினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களை தம்முடன் அணைத்துக் கொண்டார்கள். மேலும் நீர் எனது சகோதரர் ஆவீர் என்று கூறினார்கள். எனது தோழர்களில் ஒருவர் கூட இல்லை. ஆனால் அவர்கள் உலகத்தை பெற்று விட்டார்கள். உம்மைத் தவிர மற்றவர்கள் உலகிலிருந்து பயன் பெற்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் தங்களிடத்தில் ஏற்கனவே கூறியிருக்கவில்லையா? தாங்கள் என்னிடம் வருகை தரும்போது தங்களால் தங்களது கண்களை கட்டுப்படுத்த முடியாது என்று நான் கூறியிருக்கவில்லையா? என்று கேட்டார்கள்.

இதன் பிறகு ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் வெளியே வந்து மக்களுக்கு மத்தியில் நின்றார்கள். மேலும் அல்லாஹ்வை புகழ்ந்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதினார்கள். அதன் பிறகு கூறினார்கள்: இஸ்லாமிய மக்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் தனது வாக்குறுதியை உண்மைப்படுத்திக்காட்டி விட்டான். அவன் எதிரிகளுக்கு எதிராக உங்களுக்கு உதவி செய்தான். மேலும் அவர்களின் நாடுகளுக்கு உங்களை வாரிசுகளாக்கி விட்டான். மேலும் உங்களுக்கு பூமியில் வலிமை வழங்கி விட்டான். எனவே உங்களது இறைவனின் அருட்கொடைகளுக்கு நீங்கள் நன்றி செலுத்த வேண்டும். நீங்கள் கட்டுப்படாமையைக் கொண்ட பணிகளிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஏனென்றால் கட்டுப்படாமையை கொண்ட செயல் அருட்கொடைகளுக்கு செய்கின்ற நன்றிகேடாகும். அல்லாஹ் ஒரு சமுதாயத்தின் மீது அருள் புரிந்து அந்த சமுதாயம் நன்றிகேடு காட்டுவதென்பது மிகக் குறைவாகவே நடந்துள்ளது. அவர்கள் விரைவாக தவ்பா செய்யவில்லையென்றால் பின்னர் நிச்சயம் அவர்களின் கண்ணியம் அழிக்கப்பட்டு விடும். அதாவது நன்றிகேடு காட்டிய பிறகு தவ்பா செய்யவில்லையென்றால் பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட கண்ணியம் அழிக்கப்பட்டு விடும். முடிந்து விடும். அவர்களின் அருட்கொடைகள் திரும்பப் பெறபட்டு விடும். அவர்கள் மீது அவர்களின் எதிரிகள் மேலோங்கி விடுவார்கள். ஏனென்றால் ஏலியாவில் பெரும்பாலான படை அதிகாரிகள் மற்றும் ஆளுநர்கள் ஒன்றுகூடி இருந்தார்கள்.

எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பல நாட்கள் வரை தங்கி இருந்தார்கள். மேலும் அவசியமான கட்டளைகளை பிறப்பித்து வந்தார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் வந்து இவ்வாறு முறையீடு செய்தார்கள். அதாவது அமீருல் மூமினீன் அவர்களே! நமது அதிகாரிகள் பறவைகளின் இறைச்சிகளையும், மைதா ரொட்டிகளையும் உண்கின்றனர். ஆனால் பொது முஸ்லிம்களுக்கு சாதாரண உணவு கூட கிடைப்பதில்லை. ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் அந்த அதிகாரிகளைப் பற்றி விசாரித்தபோது, இங்கு அனைத்துப் பொருட்களும் விலை மலிவாக உள்ளன. ஹிஜாஸில் என்ன விலையில் ரொட்டியும், பேரீத்தம் பழங்களும் கிடைக்கின்றனவோ இங்கு அதே விலையில் பறவையின் இறைச்சியும், மைதாவும் கிடைத்து விடுகிறது என்று கூறினர்.

நீங்கள் இன்ன உணவை உண்ணக் கூடாது என்று அதிகாரிகளை ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் நிர்பந்திக்கவில்லை. ஆனால் போர் செல்வங்கள் மற்றும் சம்பளம் மட்டுமின்றி ஒவ்வொரு சிப்பாய்களுக்கும் உணவையும் நிர்ணயம் செய்யும்படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளை வழங்கினார்கள். அதாவது சிப்பாய்களாக இருப்பவர்களுக்கு ஊதியம் மட்டுமின்றி உணவும் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

இது குறித்த மேலும் சில விளக்கங்கள் ஓரிடத்தில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் யஸீத் பின் அபுசுஃப்யான் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எங்களது நகரத்தின் இறைச்சி மலிவானதாகும். இதே விலையில் எங்களால் ஒரு நீண்ட காலம் வரை வாழ்க்கையை கழிக்க முடியும். இந்த விஷயங்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறுகின்ற விஷயங்களோடு இணைந்து விடுகின்றன. ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் கூறினார்கள்: விஷயம் இதுவென்றால் பின்னர் மிகவும் மகிழ்ச்சியுடன் வயிறு நிறைய உண்ணுங்கள். மேலும் நீங்கள் எனக்கு முன் பொருட்களையும், அதன் விலைப் பட்டியலையும் வைக்காத வரை நான் இங்கிருந்து திரும்பிச் செல்ல மாட்டேன். நான் நகரங்களிலும், கிராமங்களிலும் வசிக்கக்கூடிய ஏழ்மையான முஸ்லிம்களுக்கு பட்ஜெட் எழுதிக் கொடுத்து விடுகின்றேன். அதன் பிறகு எந்த முஸ்லிமிற்கு எவ்வளவு தேவைப்படுமோ அவர் அந்த பட்ஜெட்டிற்குள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கோதுமையையும், தேனையும், ஆலிவ் எண்ணெய்யையும் வழங்கிக் கொள்ளட்டும்.

பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் அந்த ஏழ்மையான மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முஸ்லிம்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: நான் உங்களுக்காக பட்டியலை தயார் செய்துள்ளேன். உங்களது தலைவர்கள் உங்களுக்கு இவை அனைத்தையும் வழங்குவார்கள். பைத்துல் மாலிலிருந்து அவை அனைத்தையும் நான் உங்களுக்கு அனுப்புவேன். ஒரு தலைவர் உங்களுக்கு இந்தப் பொருட்களை வழங்கவில்லையென்றால் எனக்கு தகவல் கொடுக்கவும். பின்னர் நான் உடனடியாக அவரை பதவி நீக்கம் செய்து விடுவேன்.

ஏலியாவில் தங்கியிருந்தபோது ஒரு முறை தொழுகைக்கான நேரம் வந்தது. அப்போது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு பாங்கு கொடுக்க கட்டளை வழங்கும்படி மக்கள் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களிடம் வலியுறுத்திக் கூறினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நான் எவருக்காகவும் பாங்கு கொடுக்க மாட்டேன் என்று நான் உறுதி எடுத்திருந்தேன். ஆனால் தங்களின் வழிகாட்டலை செயல்படுத்துவேன் என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களின் கட்டளையின் கீழ் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கொடுத்தபோது அனைத்து சஹாபிகளுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் நினைவுக்கு வந்தது. அழுது அழுது நிம்மதியழந்து விடும் அளவில் அவர்களிடம் உருக்கம் ஏற்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீதும் தொண்டடை வறண்டு விடும் அளவிற்கு கடுமையான உருக்கம் ஏற்பட்டது. மேலும் நீண்ட காலம் வரை அதன் தாக்கம் இருந்தது. பைத்துல் முகத்தஸிலிருந்து திரும்பும் நேரத்தில் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் அனைத்து நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்தார்கள். எல்லைப் புறங்களை ஆய்வு செய்து நாட்டின் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

(அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 125, 126 – 2004


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

பைத்துல் முகத்தஸிற்கு வருகை தந்ததன் மூலம் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்களின் நோக்கம் முழுமையடைந்திருந்தது. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த வழியாக வருகை தந்திருந்தார்களோ அதே வழியில் மதீனாவிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். ஜாபிஆ என்ற இடத்தை அடைந்து ஃபாரூகே அஃஸம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிறிது நான் தங்கியிருந்தார்கள். அதன் பிறகு தமது குதிரையில் அமர்ந்து புறப்பட்டு விட்டார்கள். அமீருல் மூமினீன் (ரலி) அவர்கள் பாலஸ்தீனத்தில் செய்திருந்த பணிகளைக் குறித்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் தகவல் கிடைத்திருந்தது. எனவே மதீனாவிற்கு வெளியில் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை மிகவும் சிறந்த முறையில் வரவேற்றார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 382 – லாஹூரிலுள்ள குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவியில் நுழைந்ததும் மேடைக்கு அருகில் சென்று இரண்டு ரக்அத் தொழுதார்கள். பின்னர் மேடை மீது ஏறினார்கள். மேலும் மக்கள் அன்னாரை சுற்றி ஒன்றுகூடி விட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் அல்லாஹ்வின் புகழை எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல் அவர்கள் மீது தரூது ஓதிய பிறகு இவ்வாறு கூறினார்கள்: மக்களே! அல்லாஹ் இந்த சமுதாயத்தின் மீது கருணை செய்துள்ளான். எனவே மக்கள் அல்லாஹ்வின் புகழை எடுத்துரைக்கவும் வேண்டும். மேலும் அவனுக்கு நன்றி கூற வேண்டும். அல்லாஹ் இந்த சமுதாயத்தின் தூதுச் செய்திக்கு கண்ணியம் வழங்கியுள்ளான். மேலும் அதனை ஒன்றுகூட்டி விட்டான். அவர்களின் வெற்றியை வெளிப்படுத்தி விட்டான். எதிரிகளுக்கு எதிரில் அவர்களுக்கு உதவி செய்துள்ளான். அவர்களுக்கு கண்ணியம் வழங்கியுள்ளான். மேலும் பூமியில் அவர்களுக்கு உறுதிப்பாட்டை வழங்கியுள்ளான். மேலும் இணை வைப்பவர்களின் பகுதிகளுக்கும், அவர்களின் வீடுகளுக்கும், அவர்களின் செல்வங்களுக்கும் அவர்களை வாரிசுகளாக்கி விட்டான். எனவே எப்போதும் அல்லாஹ்விற்கு நன்றி கூறிக்கொண்டிருங்கள். அவன் உங்களுக்கு மேலும் அதிகமாக வழங்குவான். மேலும் அவன் உங்கள் மீது செய்த அருட்கொடைகளுக்காக அல்லாஹ்வின் புகழை எடுத்துரையுங்கள். அவன் எப்போதும் அந்த அருட்கொடைகளை உங்கள் மீது நிலைநாட்டி வைப்பான். அல்லாஹ் எம்மையும், உங்களையும் நன்றி கூறக்கூடியவர்களாக ஆக்கி வைப்பானாக. இதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மேடையிலிருந்து கீழே இறங்கி விட்டார்கள்.

(அல்இக்திஃபா பிமாதஸ்மினா மின் மகாஸி ரஸூலுல்லாஹ் (ஸல்) வ ஸலாஸத்துல் குலஃபா தொகுதி 2 பாகம் 1 பக்கம் 305, 306 – 1997 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஜெருஸலேம் முற்றுகையின்போது உங்களது கலீஃபா வந்தால் நாங்கள் அவருடன் பேசுவோம் என்று பாதிரிமார்கள் கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதே எளிமையுடன் புறப்பட்டார்கள். அடிமைகளுடன் மாறி, மாறி ஒட்டகங்களில் பயணித்து வந்தார்கள். தாங்கள் உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள். குதிரையின் மீது சவாரி செய்து கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அன்னார் (ரலி) அவர்கள் அந்தக் கூற்றை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சிறிது தூரம் சென்று குதிரையிலிருந்து இறங்கி அமர்ந்து விட்டார்கள். அதே எனது ஆடையையும், ஒட்டகத்தையும் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். அன்னார் சென்றபோது பித்ரீக் மற்றும் ஏனையோர் அச்சத்திற்குள்ளாகி சாவிகளை வீசி விட்டனர். இந்த படைத் தளபதியுடன் எங்களால் போட்டி போட முடியாது என்று அவன் கூறினான்.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 2 பக்கம் 174)

தமது வடிவில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை எடுத்துரைத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்: ஜெருஸலேமில் ஒரு பள்ளிவாசல் உள்ளது. கானா காபா முஸ்லிம்களுக்கு அருளுக்குரியதாக இருப்பதுபோன்று யூதர்களுக்கு அந்த இடம் அருளுக்குரிய இடமாகும். முஸ்லிம்களின் காலத்தில் ஜெருஸலேம் வெற்றி கொள்ளப்பட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த இடத்திற்கு வருகை தந்து தொழ வேண்டுமென்று கிறிஸ்துவர்கள் விரும்பினர். ஆனால் நான் இந்த இடத்தில் தொழுகை நடத்தினால் பின்னர் முஸ்லிம்கள் இந்த இடத்தை தமது வணக்க ஸ்தலமாக மாற்றிக் கொள்வார்கள் என்று நான் அஞ்சுகின்றேன் என்று கூறி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெளியில் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 11 பக்கம் 437 குத்பா ஜுமுஆ 27 ஜுலை 1928)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் பாலஸ்தீன் வெற்றி கொள்ளப்பட்டது. அன்னார் ஜெருஸலேம் சென்றபோது ஜெருஸலேமைச் சேர்ந்த பாதிரிமார்கள் ஊரை விட்டு வெளியே வந்து நகரத்தின் திறவுகோல்களை அன்னாரிடத்தில் ஒப்படைத்து விட்டார்கள். மேலும் இனி தாங்கள் எங்களது அரசராவீர்கள். தாங்கள் எங்களது இந்த புனித ஸ்தலத்தில் (அது உங்களுக்கும் புனித ஸ்தலமாகும்) தொழுது கொள்ளுங்கள். இதனால் தங்களுக்கு மன நிறைவு ஏற்படும் என்று கூறி பள்ளிவாசலுக்குள் வருகை தந்து இரண்டு ரக்அத் நஃபில் தொழும்படியும் அவர்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நான் உங்களது பள்ளிவாசலில் இந்த காரணத்தால் தொழ மாட்டேன். ஏனென்றால் நான் அவர்களின் கலீஃபாவாக இருக்கின்றேன். நாளை இந்தப் பள்ளிவாசலை இந்த முஸ்லிம்கள் பறித்துக் கொள்வார்கள். மேலும் இது எங்களது புனித ஸ்தலமாகும் என்று கூறி விடுவர். எனவே நான் வெளியிலேயே தொழுது கொள்கின்றேன். உங்களது பள்ளிவாசல் பறிக்கப்படக்கூடாது என்பதற்காக நான் வெளியில் தொழுகின்றேன் என்று அன்னார் கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 573)

எவ்வாறிருப்பினும் ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டில் ரோமானியர்கள் புறமிருந்து ஒரு இறுதி முயற்சி நடந்தது. இந்த முயற்சியின் காரணமாகவே முஸ்லிம்களுக்கு சிரியாவின் மீது முழுமையாக வெற்றி கிடைத்தது. நாளுக்கு நாள் இஸ்லாமிய வெற்றிகள் விரிவடைந்து கொண்டே சென்றன. இஸ்லாமிய அரசாங்கத்தின் எல்லைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே சென்றன. அண்டை அயலாரின் அரசாங்கங்களுக்கு ஒரு நாள் நம்முடைய முறையும் வந்து விடும் என்ற அச்சம் சுயமே உருவாகி விட்டன. எனவே ஈராக் மற்றும் சிரியாவிற்கு மத்தியில் குடிபெயர்ந்த தீவு வாசிகள் யஸவ்ஜரத் ரேவிற்கு தப்பியோடிய பிறகு அவர்கள் அவன் மீது நிராசையடைந்தனர். எனவே அவர்கள் ஹிர்குலிற்கு கடிதம் எழுதினர். அவர்கள் முஸ்லிம்களுடன் சண்டையிடுவதற்கும், அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறுவதற்கும் கடல் மார்க்கமாக படையை அனுப்பினால் அவர்கள் அவர்களுக்கு உதவி செய்வார்கள் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர். ஹிர்குல் இந்த விவகாரத்தை சீர்தூக்கிப் பார்த்தான். மேலும் இதில் பாதிப்பிற்கான எந்த அம்சமும் இல்லை என்ற முடிவிற்கு அவன் வந்தான். தீவுகளைச் சார்ந்தவர்கள் ஹிர்குலிற்கு இரண்டாவது முறை கடிதம் எழுதினார்கள். அதன் மூலம் அவர்களின் எண்ணங்களில் எந்த கலப்படமும் இல்லை என்பதை அவன் புரிந்து கொண்டான். அவர்களில் பெரும்பாலான அரேபிய கிறிஸ்துவர்கள் தமது மார்க்கத்தை உறுதியுடன் பிடித்திருக்கின்றார்கள். அதன் வழியில் சண்டையிட்டு மடிவதை சிறந்ததாக கருதுகின்றனர் என்பதை ஹிர்குல் அரசன் கண்டு கொண்டான்.

ஹிர்குலிற்கு சிரியா மைதானத்திலிருந்து வெளியே ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் கழிந்திருந்தது. எனவே அவனது உள்ளத்தில் முன்பிருந்ததுபோன்ற அச்சம் எஞ்சியிருக்கவில்லை. பின்னர் அவன் இதனைக் கண்டான். அதாவது ஏராளமான எல்லைப்புற பகுதிகளால் இன்னும் முஸ்லிம்களின் தாக்குதலை சமாளிக்க முடியும். மேலும் அவர்களுக்கு எதிராக நிற்க முடியும் என்பதை அவன் கண்டான். அவனது போர்த் தளவாடங்களும் பாதுகாப்பாக இருந்தன. மேலும் முஸ்லிம்கள் கடல் மற்றும் கடலிலிருந்து வரக்கூடிய ஒவ்வொரு விஷயத்திற்கும் அஞ்சுகின்றனர் என்பதையும் அவன் அறிந்திருந்தான். இதன் மூலம் அவனது எண்ணம் வலிமை பெற்றது. தீவுவாசிகளின் கோரிக்கையை ஒப்புக் கொள்வதற்கு அவன் இணங்கி வந்தான். அவன் தனது கடிதத்தில் அந்தக்

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

கோத்திரங்களுக்கு உத்வேகமூட்டினான். அவர்களின் தைரியத்தை அதிகரித்தான். மேலும் கப்பல்களுக்கு கட்டளை தரப்பட்டு விட்டன. அவை படை மற்றும் போர்த் தளவாடங்களை எடுத்துக் கொண்டு இஸ்கந்தரியாவிலிருந்து அன்தாகியாவிற்கு வந்து கொண்டிருக்கின்றன என்று எழுதினான். ஹிர்குலின் கடிதம் கிடைத்தபோது கோத்திரங்கள் தமது முப்பதாயிரம் எண்ணிக்கையிலான படையை அழைத்துக் கொண்டு தீவிலிருந்து ஹிம்ஸை நோக்கி புறப்பட்டு விட்டனர்.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு இந்த அனைத்து விஷயங்களைப் பற்றிய தகவலும் கிடைத்தது. அன்னார் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை ஆலோசனை செய்வதற்காக கினஸ்ஸரீன் என்ற இடத்திலிருந்து அழைத்தார்கள். இந்த இரண்டு போர்த் தளபதிகளும் இணைந்து எதிரியை எதிர்கொள்வதற்காக அனைத்து இஸ்லாமிய படைகளும் சிரியாவின் வடக்கில் ஒன்றுகூட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். எனவே அன்தாகியா, ஸமாக், ஹலப் மற்றும் அருகிலிருந்த அனைத்து இராணுவ முகாம்களிலிருந்தும் படை ஹிம்ஸ் என்ற இடத்தில் ஒன்றுகூட்டப்பட்டன. மற்றொரு பக்கம் ஹிர்குலின் படைகள் கடல் மார்க்கமாக வந்து கொண்டிருக்கின்றன என்றும் தீவுகளின் கோத்திரங்கள் தாக்குதல் நடத்துவதற்காக ஹிம்ஸை நோக்கி புறப்பட்டு விட்டன என்றும் செய்தி நாடு முழுவதும் பரவியது.

எனவே கைஸர் மற்றும் அவனது தோழர்களின் இந்த புதிய தாக்குதலை எதன் மூலம் தடுத்து நிறுத்தப்படும் என்று மக்கள் ஒருவர் மற்றவரிடம் மிகவும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். ஹிர்குலின் படை அன்தாகியாவை வந்தடைந்தபோது நகரத்தின் வாசல்கள் படைக்காக திறக்கப்பட்டன. குடிமக்கள் முஸ்லிம்களுக்கெதிராக ஆகிவிட்டனர். சிரியாவின் வடக்கு முழுவதும் கிளர்ச்சியின் ஜுவாலை கொழுந்து விட்டெறிந்தது. ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹிம்ஸ் நகரத்திலேயே தம்மை தடுத்து நிறுத்திக் கொண்டார்கள். அந்த நகரத்தை கிளர்ச்சியாளர்கள் நாலாபுறமிருந்தும் சுற்றி வளைத்திருந்தனர். மேலும் கடல் மற்றும் பாலைவனம் இரண்டு வழியாகவும் எதிரிகள் தம்மை நோக்கி முன்னேறி வருவதை அன்னார் கண்டார்கள். அன்னார் தமது தோழர்களை ஒன்றுகூட்டினார்கள். நான் அமீருல் மூமினீன் (ரலி) அவர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன். இந்த அபாயகரமான கட்டத்தில் அவர்களிடம் நான் உதவி வேண்டியுள்ளேன். இதன் பிறகு முஸ்லிம்கள் எதிரிகளிடமிருந்து வெளியேறி போரிட வேண்டுமா? அல்லது மதீனாவிலிருந்து வரக்கூடிய துணைப் படைக்காக காத்திருந்து கோடைக்குள் அடைபட்டுக் கொண்டு போரிட வேண்டுமா? என்று கேட்டுள்ளேன் என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மட்டுமே மைதானத்திலிருந்து வெளியேறி போரிட வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கினார்கள். மற்ற அனைத்து இராணுவ அதிகாரிகளும் கோட்டைக்குள் இருந்து கொண்டு அதி விரைவாக துணைப் படையை அனுப்பும்படி வேண்ட வேண்டும் என்று ஆலோசனை கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கோட்டைக்குள் அடைபட்டுக் கொள்ள வேண்டும் என்று கருத்து கூறிய மக்களின் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் வெளியேறி போரிட வேண்டுமென்ற ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் ஆலோசனையிலிருந்து கருத்து வேறுபாடு கொண்டார்கள். எனவே இராணுவ முகாம்களை வலிமைப்படுத்தி கிலாஃபத் அவையில் தமது தோழர்களின் கருத்தை எழுதி அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருபோதும் இந்த விஷயத்தை மறக்ககூடியவர்களாக இருந்திருக்கவில்லை. அதாவது ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய படைகளுக்கு எப்போதாவது இதுபோன்ற அபாயம் வந்து விட்டால் பின்னர் இஸ்லாமிய படைகள் இதே சோதனையில் பலவீனமடைந்து விடுவார்கள். இந்த நிலையை அவர்கள் எதிர்கொண்டு வந்தார்கள். இதிலிருந்து அவர்கள் தமது கிலாஃபத்தின் (ஆரம்ப) நாளிற்கு திரும்பி விடக்கூடும். அதாவது ஆரம்ப நாளன்று என்ன நிலை இருந்ததோ அது தற்போதும் ஏற்பட்டு விட முடியும். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பஸ்ரா மற்றும் கூஃபாவில் குடிபெயரும்படி கட்டளையிட்டிருந்தார்கள். ஏனென்றால் இந்த இரண்டு நகரங்களில் முஸ்லிம்களின் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கு முஸ்லிம் அல்லாத எவரும் வசித்திருக்கவில்லை. அதுமட்டுமின்றி ஏனைய 7 நகரங்களில் ஒவ்வொரு நகரத்திலும் 4000 சவாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் இதுபோன்ற அசாதாரண தேவைகளுக்காக ஆணிகளையும், முற்களையும் நிறைத்து வைத்திருந்தனர். எனவே ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் கடிதம் கிலாஃபத் அவையை சென்றடைந்தபோது முஸ்லிம்களின் இந்த மாபெரும் படை ஒரு மிகப்பெரிய அபாயத்தால் சூழப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொண்டார்கள். மேலும் அதனை அறிவித்தார்கள்.

எனவே ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்கு உடனடியாக கட்டளை வழங்கி இவ்வாறு அனுப்பி வைத்தார்கள். எந்த நாள் உங்களிடம் இந்த கடிதம் கிடைக்குமோ அதே நாளன்று கஃகா பின் அம்ர் அவர்களை உதவி படையுடன் ஹிம்ஸிற்கு அனுப்பி விடுங்கள். அபூஉபைதா (ரலி) அவர்கள் அங்கே முற்றுகையிடப்பட்டுள்ளார்கள். எவ்வளவு விரைவாக, எவ்வளவு வேகமாக அங்கு உதவிப் படைகள் சென்றடைவது சாத்தியமோ அவ்வளவு விரைவாக சென்றடையட்டும் என்றும் கட்டளையிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அதே நாளன்று அமீருல் மூமினீன் அவர்களின் கட்டளையின்படி அமல் செய்தார்கள். மேலும் கஃகா தலைமையில் 4000 அனுபவம் வாய்ந்த சவாரிகளின் படையை தயார் செய்து கூஃபாவிலிருந்து ஹிம்ஸை நோக்கி அனுப்பி வைத்தார்கள். விவகாரம் எவ்வளவு அபாயகரமானதாக இருந்ததென்றால் வெறும் 4000 படையினருடன் கஃகா அவர்கள் அவனை எதிர்கொள்வதற்காக செல்வது போதுமானதாக இருந்திருக்கவில்லை. ஏனென்றால் தீவுகளிலிருந்து ஹிம்ஸை நோக்கி வரக்கூடியவர்களின் எண்ணிக்கை 30000 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை, படையை தவிர்த்ததாக இருந்தது. ஹிர்குல் கடல் வழியாக அன்தாகியாவிற்கு அனுப்பியிருந்த எண்ணிக்கை இதை விட அதிகமாக இருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். அன்னாரின் நபர்கள் சிரியாவின் ஒவ்வொரு நகத்திலும் அங்குள்ள உள்ளூர் வாசிகளை சமாளித்து வருகின்றார்கள். அவர்கள் இந்த நகரத்தை விட்டு விட்டு ஹிம்ஸிற்கு சென்று விட்டால் பின்னர் சிரியாவின் முழு அமைப்பும் சிதறுண்டு விடும். எனவே அவர்கள் கஃகா அவர்களை கூஃபாவிலிருந்து புறப்பட்டுச் செல்லும்படி கட்டளை வழங்கிய பிறகு இன்னும் பல கட்டளைகளை பிறப்பித்தார்கள். அந்த கட்டளைகள் அவர்களின் சிந்தனைகள் மற்றும் தொலைநோக்கு பார்வைக்கான கண்ணாடியாக உள்ளது. தீவுகளிலிருந்து ஹிம்ஸிற்கு வரக்கூடிய கோத்திரங்களிடம் இந்த தைரியம் இருந்தது. அவர்கள் அறிந்திருந்தார்கள். அதாவது அவர்களின் நகரங்கள் இஸ்லாமிய படைகளின் தாக்குதல்களிலிருந்து தப்பித்திருந்தது. எனவே இந்த ஊர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் கோத்திரங்கள் வந்த வழியில் திரும்பிச் சென்று விடுவார்கள். மேலும் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் மற்றும் அன்னாரின் படையின் மீது அதிகரித்து வந்த அழுத்தம் சற்று தனிந்து விடும்.

எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்கு, சுஹைல் பின் அதீ அவர்களின் தலைமையில் ஒரு படையை தீவுகளின் நகரமான ரக்காவிற்கு அனுப்பும்படி கடிதம் எழுதினார்கள். தீவுவாசிகளே ரோமானியர்களை ஹிம்ஸ் நகரத்தின் மீது தாக்குதல் தொடுக்கும்படி தூண்டினார்கள். மேலும் அவர்களுக்கு முன்பாக தர்கிஸீஸியா வாசிகள் இதே செயலை செய்திருந்தனர். ஏனைய படையை அப்துல்லாஹ் பின் இத்பான் அவர்களின் தலைமையில் நஸீபைன் மீது தாக்குதல் தொடுக்கும்படி அனுப்பி வையுங்கள். இங்குள்ள குடிமக்களையும் தர்கீஸியா வாசிகள் தாக்குதல் தொடுப்பதற்கு தூண்டி விட்டார்கள். அடுத்து ஹர்ரான் தீவுகளின் தலைநகரமாக இருந்தது. மேலும் ருஹா என்ற இடத்திற்குச் சென்று எதிரியை வெளியேற்றும்படியும் கூறப்பட்டது. ஹர்ரான் மற்றும் ருஹா என்ற இடத்தை அடைந்து அங்கிருந்து எதிரியை வெளியேற்ற வேண்டும் என்று விரும்பினர். வலீத் பின் உக்பா அவர்களின் தலைமையில் ஒரு படையை கிறிஸ்துவ அரேபிய கோத்திரமான ரபீஆ மற்றும் சனூஹின் பக்கம் அனுப்பி வையுங்கள். மேலும் இயாஸ் பின் கனம் அவர்களை அதே தீவின் பாதுகாப்பிற்காக அனுப்புங்கள். போர் நடைபெறும் என்றால் ஏனைய அனைத்து தளபதிகளும் இயாஸ் பின் கனம் அவர்களின் தலைமையின் கீழ் இருப்பார்கள். எனவே இந்த அனைத்து போர்ப் படை தளபதிகளும் புறப்பட்டு விட்டனர். அப்போது தீவுவாசிகள் ஹிம்ஸின் முற்றுகையை கைவிட்டு விட்டு தீவுகளுக்கு சென்று விட்டனர்.

இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நடைமுறையாக இருந்தது. அதாவது அங்கு ஒன்றுகூடுவதற்கு பகரமாக எந்தப் பகுதிகளில் எதிரி படைகள் ஒன்றுகூடி இருந்ததோ அந்த நகரங்களில் மற்றும் பகுதிகளில் படையை அனுப்புவது அன்னாரின் நுட்பமான செயல் திட்டமாக இருந்தது. அதன் விளைவு என்னவாயிற்று என்றால், முஸ்லிம்கள் தமது பகுதிகளிலும், தீவுகளிலும், நகரங்களில் வருகின்றார்கள் என்பதை எதிரிகள் கண்டபோது இந்த மக்கள் அங்கு முற்றுகையை விட்டு விட்டு வெளியே சென்று விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பின்னர் இதே திட்டத்துடன்

நின்று விடவில்லை. மேலும் அவர்கள் ஆய்வு செய்திருந்தார்கள். அதாவது மீண்டும் மீண்டும் தோல்விகளை சந்தித்த பிறகு ஹிர்குல் அரசன் கடல் மார்க்கமாக படையை அனுப்புவதற்கு காரணம் என்னவென்றால், அவனுக்கு தனது வலிமையின் மீது நம்பிக்கை இருந்தது. இந்த எண்ணிக்கையில் தனிமையில் முஸ்லிம்களுக்கு போட்டியிடுவதற்கு வலிமை இருந்தது. அதற்குரிய மாபெரும் ஆதாரம் என்னவென்றால், இஸ்கந்தரியாவிலிருந்து வந்து கொண்டிருந்த கப்பல் படைகளுக்கு அவன் தனது மகனான கிஸ்தன்தீனை கமாண்டராக ஆக்கி இருந்தான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் திட்டத்திற்கேற்ப கஃபா பின் அம்ர் அவர்கள் தம்முடன் 4000 போர் வீரர்களை அழைத்துக் கொண்டு ஹிம்ஸை நோக்கி புறப்பட்டார்கள். சுஹைல் பின் அதீ, அப்துல்லாஹ் பின் இத்பான், வலீத் பின் உக்பா, இயாஸ் பின் கனம் ஆகியோர் தீவுவாசிகளின் வடக்குப் பக்கத்தின் பல்வேறு நகரங்களுக்கு சென்றிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹிம்ஸின் எண்ணத்துடன் மதீனாவை விட்டு புறப்பட்டிருந்தார்கள். மேலும் ஜாபிஆவில் தங்கியிருந்தார்கள். தீவுவாசிகள் ஹிம்ஸ் நகர முற்றுகையின்போது ரோமானியர்களுக்கு உதவி செய்தார்கள். ஈராக்கிலிருந்து இஸ்லாமிய படையின் வருகை குறித்த செய்தி அவர்களுக்கு கிடைத்திருந்தது. ஆயினும் இந்தப் படை நமத் என்ற தீவு நகரங்களின் மீது தாக்குதல் தொடுக்குமா? அல்லது ஹிம்ஸ் நகரத்தின் மீதா? என்பதை அறியாமல் இருந்தது. எனவே அவர்கள் தமது நகரம் மற்றும் தமது சகோதரனின் பாதுகாப்பில் ஈடுபட்டு விட்டார்கள். ரோமானியர்களுக்கு உதவி செய்வதை விட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஒரு நாள் தூங்கி எழுந்தபோது தீவு நாடுகள் தமது நாட்டிற்கு திரும்பி விட்டன என்பது தெரிய வந்தது. மேலும் தமது நாட்டில் ஹிர்குல் படை மட்டுமே எஞ்சியுள்ளது என்பதை அறிந்தார்கள். அன்னார் தமது படைகளின் தலைவர்களை அழைத்து ரோமானியர்களை எதிர்கொள்ள மைதானத்திற்கு புறப்பட விரும்புவதாக அன்னார் கூறினார்கள். இதைக் கேட்டு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். ரோமானியர்கள் இந்த புதிய சூழலை எதிர்கொள்ள ஏதாவது சூழ்ச்சியை செய்வதற்கு முன்பு அவர்கள் மீது உடனடியாக தாக்குதல் நடத்த வேண்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் படையின் போர் வீரர்களிடம் ஒரு உணர்வுமிக்க சொற்பொழிவை ஆற்றினார்கள். மேலும் முஸ்லிம்களே! இன்று எவரின் பாதம் நிலைபெறுமோ அவர் உயிர் பிழைத்துக் கொண்டால் பின்னர் நாடு மற்றும் செல்வம் அவருக்கு கிடைக்கும். ஒருவேளை அவர் கொல்லப்பட்டு விட்டால் ஷஹாதத்தின் செல்வம் அவருக்கு கிடைக்கும். மேலும் நான் சாட்சியம் வழங்குகின்றேன். எந்த நபர் இணைவைப்பவராக இல்லாத நிலையில் மரணிப்பாரோ அவர் நிச்சயம் சுவர்க்கத்தில் நுழைவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கு நான் சாட்சி பகர்கிறேன்.

ஏற்கனவே படை தாக்குதல் தொடுப்பதற்கு நிம்மதியழந்து இருந்தது. அபூஉபைதா (ரலி) அவர்களின் இந்த சொற்பொழிவு அவர்களை மேலும் உணர்வூட்டியது. உடனடியாக அனைவரும் ஆயுதங்களை ஏந்திக் கொண்டனர். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் மையப் படையையும், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மைமனா பிரிவையும், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் மைஸரா பிரிவையும் அழைத்துக் கொண்டு முன்னேறினார்கள். இரண்டு தரப்புகளுக்கு மத்தியிலும் போர் மூண்டது. முஸ்லிம்களுக்கெதிரில் சிறிது நேரத்திலேயே ரோமானியர்களின் பாதங்கள் தடுமாறி விட்டன. மேலும் அவர்கள் தோல்வியடைந்தனர். கஃகா பின் அம்ர் கூஃபாவின் படையுடன் ஹிம்ஸை வந்தடைந்தபோது போர் முடிந்து மூன்று நாட்கள் கழிந்திருந்தன. மற்றொரு பக்கம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவின் வழியாக ஜாபிஆவை வந்தடைந்தபோது ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் தூதுவர் சந்தித்தார். கஃகா ஹிம்ஸ் வந்தடைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ரோமானியர்களுக்கு எதிரில் வெற்றியை வழங்கி விட்டான் என்று தூதுவர் கூறினார். கஃகா மற்றும் அன்னாரது படைக்கு போர் செல்வங்களிலிருந்து பங்கை வழங்க வேண்டுமா? வழங்க வேண்டாமா? என்பது குறித்து ஆலோசனை வேண்டினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மன நிறைவுடைந்திருந்தார்கள். இந்த செய்திக்குப் பிறகு பயணத்தை தொடர வேண்டுமென்பதற்கான தேவையை அன்னார் உணரவில்லை. எனவே அங்கிருந்தே அமீனுல் உம்மத்தான ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:

கூஃபாவாசிகளை போர் செல்வங்களை பங்கிடுவதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களின் வருகையின் செய்தி தான் எதிரிகளின் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாகவே எதிரி தோல்வியுற்றான். அல்லாஹ் கூஃபாவாசிகளுக்கு நற்கூலியை வழங்குவானாக. தமது பகுதியின் பாதுகாப்பையும் செய்கின்றனர். ஏனைய நகரங்களுக்கு உதவியும் செய்கின்றனர். இதன் பிறகு அவர்கள் மதீனாவிற்கு புறப்பட்டு விட்டார்கள். இந்தத் தோல்விக்குப் பிறகு கைஸருக்கு மிகவும் நிராசை தொற்றிக் கொண்டது. எந்த அளவுக்கென்றால் அதன் பிறகு அவன் ஒருபோதும் சிரியாவின் பக்கம் முகம் திருப்பவில்லை. மற்றொரு பக்கம் ரோமானிய படைகள் கப்பல்களில் அமர்ந்து தப்பி ஓடிவிட்டன என்ற செய்தி கிளர்ச்சியாளர்களுக்கு தெரிய வந்தபோது அவர்கள் தமது கிளர்ச்சியால் தாமே மடிந்து போயினர். இது ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டின் சம்பவமாகும். இதற்கு மூன்று வருடங்களுக்குப் பிறகு ஹிர்குல் அரசன் ஹிஜ்ரி 20 ஆம் ஆண்டு கிறிஸ்துவ காலண்டரின் அடிப்படையில் 641 ஆம் ஆண்டு மரணமடைந்து விட்டான்.

முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 384–390, 590 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) என்ற நூல் பக்கம் 750–752 &அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 134–136 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இந்த நற்குறிப்பு எதிர்காலத்திலும் தொடரும் இன்ஷா அல்லாஹ். தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகின்றேன். அதில் முதலாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய சவுத்ரி சயீத் அஹ்மத் லகன் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஓய்வு பெற்ற ஸ்டேஷன் மாஸ்டர் ஆவார். அன்னார் இன்றைய நாட்களில் கனடாவில் இருந்தார்கள். 86 வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்ததுள்ளது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் சவுத்ரி சிகந்தர் அலி சாஹிப் மற்றும் ஹஸ்ரத் குஜ்ஜர் பீ.பீ சாஹிபா (ரலி) அவர்களின் மகள்வழிப் பேரனாக இருந்தார்கள். ஹஸ்ரத் சவுத்ரி சிகந்தர் (ரலி) சாஹிப் 1902 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்திருந்தார்கள். 1904 முதல் 1928 வரை மதரஸா தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தில் கல்வி பொறுப்புகளை ஆற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாழ்க்கையில் தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தில் நியமித்த ஆரம்பகால ஆசிரியர்களில் ஒருவராக அன்னார் இருந்தார்கள். சவுத்ரி சயீத் சாஹிப் அன்னாரின் மகன்வழிப் பேரனாக இருந்தார்கள். மர்ஹூம் அவர்களும் அல்லாஹ்வின் அருளால் வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் மார்க்க தொண்டாற்றி வந்தார்கள். சவுத்ரி சயீத் சாஹிப் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். மர்ஹூம் தமக்குப் பிறகு ஒரு மனைவி மட்டுமின்றி 6 மகன்களையும், 3 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னார் தமது பிள்ளைகளுக்கு வழங்கிய அழகிய தர்பிய்யத்தின் காரணமாக அன்னாரின் அனைத்து பிள்ளைகளும் ஏதாவதொரு வடிவில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு பெற்று வருகின்றனர். அன்னாரின் ஒரு மகனான ஃபஹீம் அஹ்மது லகன் சாஹிப் கேம்பியாவில் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார்கள். அங்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு பெற்று வருகின்றார்கள். செயல் களத்தில் இருந்ததன் காரணமாக தனது தந்தையாரின் ஜனாஸாவில் பங்கு பெற முடியாமல் போனது. அல்லாஹ் அன்னாருக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. மேலும் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

மர்ஹூம் மிகவும் மார்க்க தன்மானம் கொண்ட மனிதராக இருந்தார்கள். மாணவ பருவத்தில் 1953 ஆண் ஆண்டில் கடல் நகர உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற மஜ்லிஸே அஹ்ராரிகளின் கூட்டத்தில் ஏனைய அஹ்மதி அல்லாத மாணவர்களுடன் அன்னாரும் கலந்து கொண்டார்கள். அப்போது


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அதாவுல்லாஹ் ஷாஹ் புகாரி என்பவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அறிவீனமான குற்றச்சாட்டை சுமத்தி அன்னார் (அலை) அவர்கள் தொடர்பாக ஆகுமற்ற சொற்களை பயன்படுத்தியபோது சயீத் சாஹிப் அவர்கள் உடனடியாக எழுந்து நின்று விட்டார்கள். மேலும் அந்த மவ்லவியை கண்டித்தார்கள். அவனது சொற்பொழிவிற்கு மத்தியிலேயே அவனை நோக்கி நீங்கள் பொய் பேசுகின்றீர்கள் என்று கூறி அவனை வாயடைக்கச் செய்து விட்டார்கள். அப்போது இந்த மிர்ஸாயியை பிடித்து அடியுங்கள் என்று அந்த மவ்லவி கூறினான். அன்னார் மீது கடுமையான தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஆனால் எவ்வாறிருப்பினும் இதற்கு மத்தியில் ஜல்ஸாவில் பதற்றம் தொற்றிக் கொண்டது. கூட்டம் கலைந்து விட்டது. அன்னார் தமது பிள்ளைகளுக்கு அஹ்மதிய்யத்தின் விவகாரத்தில் ஒருபோதும் எவரின் அழுத்தத்திற்கும் கீழ் வரவும் கூடாது. அல்லது எவருக்கும் அஞ்சவும் கூடாது என்று எப்போதும் அறிவுரை செய்து வந்தார்கள்.

இரண்டாவது நற்குறிப்பு பங்களாதேஷின் தேசிய துணை அமீரான மதிப்பிற்குரிய முஹம்மது ஷஹாபுத்தீன் சாஹிப் அவர்களுடையதாகும். ஜூலை 12 ஆம் தேதி அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

1964 ஆம் ஆண்டில் 18 ஆவது வயதில் ஒரு கனவில் அடிப்படையில் அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். ஜமாஅத்தின் கலப்பற்ற தொண்டர்களில் ஒருவராக இருந்தார்கள். ஏராளமான சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். கிலாஃபத்தின் மீது பற்றுமிக்கவராகவும், நம்பிக்கை கொண்டவராகவும், அமானிதங்களை பேணக்கூடியவராகவும், அமைதியான இயல்பு படைத்தவராகவும், ஜமாஅத் மற்றும் அமைப்பிற்கு நன்மையான விஷயங்களை நன்கு புரியக்கூடியவராகவும் இருந்தார்கள். தமது மரணத்திற்கு முன்பு வஸிய்யத் சந்தா கணக்குகளை சரி செய்து விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னாரின் மகன் ஷம்சுத்தீன் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார். மர்ஹூமின் சந்ததிகளில் 4 மகன்கள் மட்டுமின்றி 3 மகள்கள் உள்ளனர். மர்ஹூம் தமது சிறிய தந்தையின் தப்லீக்கின் தாக்கத்திற்குள்ளாகி அஹ்மதியாகி இருந்தார்கள். தமது குடும்பத்தில் கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டது. பொறுமை மற்றும் உறுதிப்பாட்டுடன் 1963 ஆம் ஆண்டு வரை சில மாதங்கள் இந்த அனைத்து எதிர்ப்பையும் சகித்துக் கொண்டார்கள். அதன் பிறகு தமது குடும்பத்தினரை விட்டு வெளியேறி முதலில் பிரம்மன் படியா என்ற இடத்திலும் பின்னர் டாகாவிற்கு சென்றும் தங்கினார்கள். பின்னர் அன்னாரின் திருமணம் பழைய அஹ்மதி குடும்பத்தில் நிகழ்ந்தது. போதுமென்ற மனம் அன்னாரின் சிறப்புகளில் ஒன்றாகும். ஏழ்மையில் திருப்தி கொண்டு, பொறுமை மற்றும் நன்றியுடன் வாழ்க்கையை கழிப்பதையும் அறிந்திருந்தார்கள். அன்னாரின் நேர்மையின் காரணமாக அஹ்மதி அல்லாத வியாபாரிகளும் அன்னாருக்கு மிகவும் கண்ணியம் வழங்கி வந்தார்கள். மேலும் அனைவரும் இந்த அடிப்படையில் அன்னாரை மிகவும் நல்லவராகவும், சரியான முறையில் வியாபாரம் செய்யக்கூடியவராகவும் கருதி இருந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய ராவல் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் அர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்தவராக இருந்தார்கள். செப்டம்பர் 6 ஆம் தேதி அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அங்குள்ள ஜமாஅத்தின் முரப்பி சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: மர்ஹூம் அர்ஜென்டினா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆரம்ப கால அஹ்மதிகளைச் சார்ந்தவராக இருந்தார்கள். அர்ஜென்டினா ஜமாஅத் முற்றிலும் புதிய ஜமாஅத் ஆகும். சில ஆண்டுகளுக்கு முன்பு ஜமாஅத் நிலைபெற்றது. 2018 ஆம் ஆண்டில் ஒரு புத்தக கண்காட்சியில் அன்னாருக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. அன்னாருக்கு ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டபோது ஜமாஅத்தைச் சாராத அன்னாரின் முஸ்லிம் நண்பர்கள் ஜமாஅத்தின் மீது அன்னாருக்கு வெறுப்பை ஏற்படுத்த விரும்பினர். ஆனால் அவ்வாறிருந்தபோதிலும் தொடர்ந்து ஜமாஅத் நிகழ்ச்சிகளில் அன்னார் பங்கு பெற்று வந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் அந்த நண்பர்களின் தாக்கத்தின் காரணமாக அன்னாரின் உள்ளத்தில் சில சந்தேகங்களும், ஐயங்களும் இருந்தன. அதனை அகற்றுவதற்காக அன்னார் யூ.கே ஆண்டு மாநாட்டி கலந்து கொண்டார்கள். தனது சொந்த செலவில் அங்கு வந்தார்கள். மேலும் இங்கு வந்த பின்னர் என்னையும் அன்னார் சந்தித்தார்கள். இந்த சந்திப்பிற்குப் பிறகு அன்னாரின் சந்தேகங்களும், ஐயங்களும் நீங்கி விட்டன. முழுமையான முறையில் அன்னாருக்கு மன நிறைவு ஏற்பட்டது. அன்னார் பைஅத்தும் செய்து விட்டார்கள். பைஅத்திற்கு முன்பாகவும் உண்மையில் அவர்கள் அஹ்மதியாகவே இருந்தார்கள். மக்களுக்கு அஹ்மதிய்யத்தை குறித்து தப்லீக் செய்து வந்தார்கள். ஆயினும் அன்னார் இங்கு வந்து முறையாக பைஅத் செய்தார்கள்.

தமது குடும்பத்தில் தனித்த முஸ்லிமாக இருந்தார்கள். அன்னாரின் நண்பர்கள் இறுதி வரை அன்னாரை ஜமாஅத்திலிருந்து விலக்கி வைக்க முயற்சி செய்தனர். ஆனால் உறுதிப்பாட்டுடன் அன்னார் ஜமாஅத்தில் நிலைநின்றார்கள். ஜமாஅத்திற்காக மிகவும் தன்மானம் கொண்டிருந்தார்கள். மேலும் எப்போதும் நம்மவர்கள் மற்றும் அந்நியர்களுக்கு முன்னால் மிகவும் பெருமிதத்துடன் தன்னை ஓர் அஹ்மதியாகவே அறிமுகம் செய்து கொண்டிருந்தார்கள். ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் மிகவும் கலப்படமற்ற முறையிலும், முழுமையான உணர்வுடனும் பங்கு பெற்று வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் உறவினர்களுக்கும், நண்பர்ளுக்கும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறை வழங்குவானாக. தொழுகைக்குப் பிறகு நான் இந்த காயிப் ஜனாஸாவை தொழ வைப்பேன்.

(தமிழாக்கம்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

________

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஆற்றல் வழங்கும் பணியை செய்யும். ஒரு வகையில் அந்த வாழ்க்கையில் பாதம் ஒருபோதும் பின்வாங்கவும் செய்யாது. மாறாக, முன்னேறிக் கொண்டே செல்லும். களைப்பின் வடிவில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த தற்காலிக அழிவின் விளைவால் மனிதனுக்கு மரணம் வருகின்றது. ஏனென்றால் கொஞ்சம் கொஞ்சமாக உடலின் ஆற்றல்கள் வீணாகி விடுகின்றன. சொர்க்கத்தில் இதுபோன்ற பாதிப்புகள் மறுக்கப்பட்டுள்ளன. எனவே தான் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது இனி அவர்களுக்கு எந்த மரணமும் கிடையாது. நினைவிற் கொள்ளுங்கள். சொர்க்கம் என்பது ஓர் ஆன்மீக இடமாகும். உருவக மொழியில் அதன் அருட்கொடைகள் உலகின் அருட்கொடைகளோடு உவமையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் உள்ளபடியே அதன் அருட்கொடைகள் எப்படிப்பட்டவைகள் என்றால் மனித மூளை அதனை புரிந்து கொள்ளவே முடியாது. இந்த வசனத்தில் உண்மையில் இதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த உலகில் அவர்களுக்கு ஷய்த்தான்களுடன் போரிடுவதற்கு அவசியம் ஏற்படுகின்றது. அங்கு (சொர்க்கத்தில்) அவர்கள் இந்த போரிலிருந்து முற்றிலும் தப்பித்திருப்பார்கள். மேலும் அவர்களின் உள்ளம் எல்லா வகையிலும் பாதுகாப்பாக இருக்கும். ஷய்த்தான் அவர்களுக்கு தற்காலிகமாகவும் பாதிப்பை ஏற்படுத்த முடியாது. நிரந்தரமாகவும் பாதிப்பை ஏற்படுத்த முடியாது.

இந்த வசனத்திலிருந்து இந்த சான்றும் நமக்கு கிடைக்கின்றது. அதாவது சொர்க்கம் சோம்பேறிகளின் சத்திரமாக இருக்காது. மாறாக, அதில் வசிப்பவர்கள் பணி செய்வார்கள். ஏனென்றால் பணி செய்ய வேண்டாமென்றால் களைபை மறுக்க என்ன அவசியம் வந்து விட்டது? எனவே சுவர்க்கம் என்பது உண்பதற்கும், பருகுவதற்கும், சுகபோகமாக வாழ்வதற்குரிய ஓர் இடம் என்று எந்த மக்கள் கருதுகின்றார்களோ அவர்கள் தவறிழைக்கின்றார்கள். சொர்க்கம் என்பது இறை அடியாராக இருப்பதற்கான அசல் இடமாகும். உதாரணமாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: فَادۡخُلِیۡ فِیۡ عِبٰدِیۡ وَادۡخُلِیۡ அதாவது உண்மையான அடியாருக்குரிய அந்தஸ்து சொர்க்கத்தில் நுழையும் நேரத்தில் கிடைக்கும். அடியார் பணி செய்கின்றார். அவர் சோம்பேறியாக அமர்ந்திருப்பதில்லை. எனவே உண்மையான பணிக்கான இடம் சொர்க்கமே ஆகும். அங்கு மனிதன் முழுமையான இறை அடியானாக ஆகி விடுவான். உணர்ச்சிகளின் ஈர்ப்புகளிலிருந்து விலகி மனிதன் தனது இறைவணக்கங்களில் முற்றிலும் இன்பத்தை உணர்வான். இதுவே சொர்க்கத்தின் சாராம்சமாகும். அங்கு களைப்பு உணரப்படாது. பொதுவாக முஸ்லிம்கள் சொர்க்கத்தை Poor House என்று (ஏழைகளின் தங்குமிடமாக) கருதுகின்றனர். பணி ஒன்றும் செய்ய மாட்டார்கள். உணவு இலவசமாக கிடைத்துக் கொண்டிருக்கும். எவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்றெல்லாம் சித்திரம் வரைந்துள்ளனர்.

لَاحَوۡلَ وَلَاقُوَّۃَ اِلَّا بِاللّٰہِ الۡعَلِیِّ الۡعَظِیۡمِ

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 84 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## ஹுஸூர் அவர்களிடம் கேட்கப்பட்ட முக்கியமான கேள்விகளும், அதற்குரிய பதில்களும்

**கேள்வி:** கணவன் மனைவிக்கிடையில் திருமணமான காலத்தில் மூன்று முறை தலாக் ஆகிவிட்டால் மூன்றாவது தலாக்கிற்குப் பிறகு சமாதானத்திற்கு என்ன வாய்ப்பு உள்ளது?

இதற்கு ஹுஸூர் அவர்கள் ஜூலை 22, 2019 ஆம் தேதி எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு பதில் வழங்கினார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

**பதில்:** اَلطَّلَاقُ مَرَّتٰنِ என்ற திருக்குர்ஆனின் கட்டளை மிகவும் தெளிவான கட்டளையாகும். அதாவது மனம் திரும்ப வாய்ப்புள்ள தலாக் என்பது இரண்டு முறை மட்டுமே நடைபெறும். அதன் பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: فَاِنۡ طَلَّقَهَا فَلَا تَحِلُّ لَهٗ مِنۡۢ بَعۡدُ حَتّٰى تَنۡكِحَ زَوۡجًا غَيۡرَهٗ

இதுபோன்ற இரண்டு தலாக்கிற்குப் பிறகு கணவன் தனது மனைவியை மூன்றாவது முறையாக தலாக் வழங்கி விட்டால் பின்னர் இந்த மூன்றாவது தலாக்கிற்குப் பிறகு அந்த கணவருக்கு அந்த மனைவியுடன் சமாதானத்திற்கான உரிமை எஞ்சியிருக்க முடியாது. இத்தா காலத்தில் நிக்காஹ் செய்து கொள்ளாமலும், இத்தா காலம் முடிந்த பிறகு நிக்காஹ் செய்து கொண்டும் அவர் அந்தப் பெண்ணுடன் குடும்பம் நடத்த முடியாது. அந்தப் பெண் வேறொருவரை முறையாக திருமணம் செய்து அந்தக் கணவர் அந்தப் பெண்ணை எந்த திட்டமுமின்றி தலாக் கொடுத்துவிடாத வரை அந்தப் பெண்ணை அவர் திருமணம் செய்ய முடியாது. எனவே நீங்கள் எடுத்துரைத்த நிலையில் இந்த கணவன், மனைவிக்கிடையில் சமாதானத்திற்கான எந்த வாய்ப்பும் இடம் பெறவில்லை. அவர்களுக்கு மத்தியில் حَتّٰى تَنۡكِحَ زَوۡجًا غَيۡرَهٗ என்ற நிபந்தனை முழுமையாகாத வரை திருமணம் நடைபெற முடியாது.

**கேள்வி:** ஒரு பெண்மணி இவ்வாறு எழுதியிருந்தார். ஓர் அஹ்மதியல்லாத முஸ்லிம் என்னிடம் அஹ்மதியல்லாத ஓர் ஆலிம் எழுதிய தஃப்ஸீர் குறித்து கேட்டால் நான் அவருக்கு எந்த தஃப்ஸீரை படிக்கும்படி கூற வேண்டும்?

இதற்கு ஹுஸூர் அவர்கள் ஜூலை 22, 2019 ஆம் தேதி எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு பதில் வழங்கினார்கள்.

**பதில்:** முந்தைய காலத்து அனைத்து சான்றோர்களின் தஃப்ஸீர்களும் சிறந்ததாகும். உங்களின் தகவலுக்காக சில தஃப்ஸீர்களின் பெயர்களை எழுதுகின்றேன். உதாரணமாக, ஹிஜ்ரி 3 இல் எழுதப்பட்ட தஃப்ஸீர் தப்ரி. அதன் முழுப் பெயர் ''ஜாமிவுல் பயான் ஃபீ தஃவீலில் குர்ஆன்'' ஆகும். மேலும் அதனை அபூஜஃபர் முஹம்மது பின் ஜரீர் பின் யஸீத் பின் கஸீருத் தப்ரி எழுதியுள்ளார்கள். ஹிஜ்ரி 6 ஆம் நூற்றாண்டில் இமாம் அபூஅப்தில்லாஹ் முஹம்மது ஃபக்ருத்தீன் இப்னு கதீப் அர்ராஸி அவர்கள் எழுதிய ''மஃபாதிஹுல் கைப், அல் மஃரூஃப் அத்தஃப்ஸீருல் கபீர்'' போன்றவை மிகச்சிறந்த தஃப்ஸீர் ஆகும்.

ஹிஜ்ரி 7 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தஃப்ஸீர் ''அல்ஜாமிவுல் அஹ்காம் அல் குர்ஆன், தஃப்ஸீர் குர்தபி'' போன்றவை ஆகும். பிரபலமான அறிஞர் அபூஅப்தில்லாஹ் முஹம்மது பின் அஹ்மத் பின் அபூபக்ர் அல்மஃரூஃப் இமாம் குர்தபி அவர்கள் இதனை எழுதியுள்ளார்கள்.

இதுமட்டுமின்றி தஃப்ஸீர் ஜலாலைன், தஃப்ஸீர் இப்னு கஸீர் மற்றும் தஃப்ஸீர் ரூஹுல் மானி போன்றவைகளும் நல்ல மற்றும் படிப்பதற்கு தகுதியான தஃப்ஸீர்களாகும்.

**கேள்வி:** ஒரு நண்பர் சில சகோதரர்கள் சார்பாக கேட்கப்படக்கூடிய கேள்வியின் அடிப்படையில் ஹுஸூர் அவர்களிடம் வழிகாட்டல் வேண்டினார். கானாவின் சூழலை கருத்தில் கொண்டவாறு இது கேட்கப்பட்டது. அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அஹ்மதிய்யத்தை உண்மையான மற்றும் சிறந்த இஸ்லாம் என்று கருதக்கூடிய மற்றும் எந்த எதிர்ப்பும் செய்யாத அஹ்மதி அல்லாத இமாம்களும் உள்ளனர். ஆனால் ஏதொவொரு நிர்பந்தத்தின் காரணமாக அவர்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறை பெறவில்லை. அவ்வாறிருக்க அதுபோன்ற நபர்கள் அல்லது இமாம்களுக்குப் பின்னால் தொழுவது ஆகுமானதா? என்று கேட்கப்பட்டது.

இதற்கு ஹுஸூர் அவர்கள் ஜூலை 22, 2019 ஆம் தேதி எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு பதில் வழங்கினார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

**பதில்:** ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஹ்மதி அல்லாத இமாமிற்குப் பின்னால் தொழுகின்ற விவகாரம் தொடர்பாக திருப்தியளிக்கக்கூடிய அளவில் விவாதித்துள்ளார்கள். எங்கு அன்னார் இந்த விவகாரத்தின் பல்வேறு அம்சங்களை நமக்கு மிகவும் தெளிவாக எடுத்தரைத்துள்ளார்களோ அங்கு அன்னார் எடுத்துரைத்த விவகாரத்தின் மீதும் ஒளிபாய்ச்சியுள்ளார்கள். எனவே ஒரு சந்தர்ப்பத்தில் நிராகரிக்காத, பொய்ப்படுத்தாத நபர்களைக் குறித்து பேசப்பட்டது. அவர்களுக்குப் பின்னால் தொழுகின்ற விவகாரம் பற்றி கேட்கப்பட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: சிலரின் பழக்கமாக இருப்பதைப் போன்று அவர்கள் நயவஞ்சக வடிவில் அவ்வாறு செய்யவில்லையென்றால் அவர்கள் இவ்வாறு விளம்பரம் செய்ய வேண்டும். நாங்கள் பொய்ப்படுத்தவும் இல்லை. நாங்கள் நிராகரிக்கவும் இல்லை. மாறாக, நாங்கள் அன்னாரை நல்ல சான்றோராகவும், இறை நேசராகவும் கருதுகின்றோம். நிராகரிப்பாளர்கள் ஒரு நம்பிக்கையாளரை காஃபிர் என்று கூறுகின்றனர். எனவே அவர் உண்மையை கூறுகின்றாரோ என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் நாம் எவ்வாறு நம்ப முடியும்? நாம் எவ்வாறு அவருக்குப் பின் தொழும்படி கட்டளை வழங்க முடியும்?

மென்மைக்குரிய சந்தர்ப்பத்தில் மென்மையும், கடுமைக்குரிய சந்தர்ப்பத்தில் கடுமையும் காட்ட வேண்டும். ஃபிர்அவ்னிடத்தில் ஒரு வகையான நேர்வழி இருந்தது. இதே நேர்வழியின் விளைவாகவே அவனின் வாயிலிருந்து கலிமா வெளிப்பட்டது. அந்தக் கலிமா மூழ்கக்கூடிய நூற்றுக்கணக்கான நிராகரிப்பாளர்களின் வாயிலிருந்து اٰمَنۡتُ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا الَّذِىۡۤ اٰمَنَتۡ بِهٖ بَنُوۡۤا اِسۡرَآءِيۡلَ என்ற கலீமா வெளிப்படவில்லை. அத்துடன் قُوۡلَا لَهٗ قَوۡلًا لَّيِّنًا என்ற மென்மைக்கான கட்டளை வந்துள்ளது. மற்றொரு பக்கம் وَاغۡلُظۡ عَلَيۡهِمۡ என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த மக்களிடத்தில் முற்றிலும் நேர்வழி இருந்திருக்கவில்லை. எனவே அதுபோன்ற ஆட்சேபனையாளர்களுடன் தெள்ளத்தெளிவாக பேச வேண்டும். ஏனென்றால் அவர்களின் உள்ளத்திலுள்ள அசுத்தங்களும், தீமைகளும் வெளிப்பட வேண்டும்.

(பத்ர் பத்திரிகை, தொகுதி 7 – 23 ஏப்ரல் 1908 பக்கம் 7)

### *126 வது காதியான் ஆண்டு மாநாடு*

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் துஆக்களுடன் இப்போதிருந்தே ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு நிய்யத் வைத்து தயாரிப்புகளை தொடங்கி விடுங்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள். (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)


### *நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்: *1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:– www.alislam.org

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 28 Oct 2021 Issue No. 43

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**கணவன் மனைவிக்கிடையிலான தொடர்புகள் சரியாக இல்லையென்றால் குழந்தைகள் மீதும் தீய தாக்கம் ஏற்படும். இந்த வழிமுறையின் மூலம் நாம் புதிய அஹ்மதி சந்ததிகளின் எதிர்காலத்தையும் அழித்து விடுவோம். எனவே மிகச் சிறந்த வழிமுறை என்னவென்றால், ஆண் அதாவது கணவர் வீட்டில் தனது நல்ல முன்னுதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும்**

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் இந்தோநேஷியா வாகிஃபீனே நவ் பிள்ளைகளின் (Online) சந்திப்பு

இந்தோநேஷியா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 50 வாகிஃபீனே நவ் பிள்ளைகளுக்கு ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் ஜனவரி 23 ஆம் தேதி 2021 ஆம் ஆண்டு சனிக்கிழமை ஒரு மணி நேரம் ஆன்லைன் மூலம் சந்திப்பதற்கு நற்பேறு கிடைத்தது. இந்த சந்திப்பு ஜகார்தாவிலுள்ள ரஹ்மத் ஹாலில் நடந்தது. திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஹாஃபிழ் வில்தான் ஃபாஸில் சூரா அஸ்ஸாஃப்ஃபாத்தின் வசனங்கள் 103 முதல் 114 வரை திலாவத் செய்தார். அதன் பிறகு அஸீஸ் முஹம்மது அன்வர் அதன் ஆங்கில மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார். நஸ்ம் பாடப்பட்ட பிறகு இந்தோநேஷியா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூற்றாண்டு விழா மற்றும் வாக்கிஃபீனே நவ் பிள்ளைகளின் பங்களிப்பு என்ற தலைப்பில் அன்பிற்குரிய முஹம்மது தல்ஹா சுருக்கமாக சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அதன் பிறகு தேசிய வக்ஃபே நவ் செயலர் மதிப்பிற்குரிய அஹ்மது அப்துர் ரஹ்மான் சாஹிப் சுருக்கமான அறிக்கையை வழங்கினார். இந்தோநேஷியாவில் மொத்தம் 2016 வாக்கிஃபீனே நவ் பிள்ளைகள் இருப்பதாகவும், அதில் 1233 வாக்கிஃபீனே நவ் ஆண் பிள்ளைகளும், 783 வாக்கிஃபாத்தே நவ் பெண் பிள்ளைகளும் உள்ளனர் என்றும் கூறினார். தற்போது 61 வாக்கிஃபீனே நவ் செயல் களத்தில் தனது தொண்டுகளை முன் வைப்பதற்கு நற்பேறு பெற்று வருகின்றனர். அவர்களில் 27 முரப்பிமார்கள் உள்ளனர். 6 பேர் MTA விலும், 4 பேர் ஜமாஅத் பள்ளிக்கூடங்களிலும், 3 பேர் கிளை அமைப்புகளின் அலுவலகங்களிலும், ஒருவர் Humanity First அலுவலகத்திலும், 20 நபர்கள் ஜமாஅத்தின் பல்வேறு அலுவலகங்களிலும் தொண்டாற்றி வருகின்றனர்.

இந்த அறிக்கைக்குப் பிறகு நான்கு நிமிட ஆவணப்படம் ஹுஸூர் (அய்ய) அவர்களுக்கு முன்னால் ஒளிபரப்பப்பட்டது. அதில் இந்தோநேஷியாவின் பல்வேறு மாநிலங்களின் வாக்கிஃபீன் மற்றும் வாக்கிஃபாத்தே நவ் பிள்ளைகள் சார்பாக தமது எஜமானருக்கு ஸலாமின் அன்பளிப்பு வழங்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போது பல்வேறு வாக்கிஃபீனே நவ் பிள்ளைகள் தனது அன்பிற்குரிய எஜமானரிடம் கேள்விகள் கேட்பதற்கும், ஹுஸூர் அவர்களின் அகப்பார்வைமிக்க பதில்களை பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு பெற்றனர்.

தவ்ஃபீக் காலித் அஹ்மது என்ற ஒரு வாக்கிஃபீனே நவ், கணவன் மனைவிக்கிடையிலான தொடர்புகள் குறித்த கேள்வியை முன் வைத்தார். ஹுஸூர்! நாங்கள் எவ்வாறு எங்களது நிக்காஹ் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்? என்பது குறித்தும், குறிப்பாக புதிதாக திருமணமான தம்பதிகளுக்கும் அருளுக்குரிய வழிகாட்டல்களை தாங்கள் வழங்கலாமா? என்றும் கேட்டார்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் இக்கேள்விக்கு இவ்வாறு பதிலளித்தார்கள்: நல்லது. மாஷா அல்லாஹ். உங்களின் மனைவி உங்களுக்கு நல்ல உணவு சமைத்துக் கொடுக்கின்றார் என்று தங்களின் உடலைப் பார்த்து தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே தங்களின் மனைவி தங்களுக்கு நல்ல உணவு சமைத்துக் கொடுக்கும்போதெல்லாம் நீங்கள் கண்டிப்பாக அவர்களை பாராட்டுங்கள். நான் எனது மனைவிக்கு முன்னால் ஒரு முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்பதையே எப்போதும் நீங்கள் சிந்திக்க வேண்டும். கணவன் மனைவிக்கிடையிலான தொடர்புகள் சரியாக இல்லையென்றால் குழந்தைகள் மீதும் தீய தாக்கம் ஏற்படும். இந்த வழியின் மூலம் நாம் புதிய அஹ்மதி சந்ததிகளின் எதிர்காலத்தையும் அழித்து விடுவோம். எனவே மிகச் சிறந்த வழிமுறை என்னவென்றால், ஆண் அதாவது கணவர் வீட்டில் தனது நல்ல முன்னுதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும். எப்போதும் மனைவி மக்களுடன் மென்மையுடனும், அழகிய பண்புகளுடனும் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இவ்வாறு நடந்து கொண்டால் பின்னர் உங்களது குடும்பத்தில் எந்த பிரச்சனையும் இருக்காது.

மற்றொரு வக்ஃபே நவ் இளைஞர் ஹுஸூர் அவர்களிடம் இவ்வாறு வேண்டினார்: கிலாஃபத்திற்கு முன்பு Center of Attention ஆக இருப்பது தங்களின் இயல்பில் விருப்பத்திற்குரியதாக இருந்திருக்கவில்லை என்று சில ஆவணப்படங்களை பார்ப்பதன் மூலம் தெரிய வருகின்றது. எனது கேள்வி என்னவென்றால், கலீஃபாவாக ஆன பிறகு இந்த புதிய சூழலில் தாங்கள் எவ்வாறு (தங்களை) மாற்றிக் கொண்டீர்கள்?

ஹுஸூர் அவர்கள் இதற்குப் பதிலாக இவ்வாறு கூறினார்கள்:

I don’t know myself. It is Allah who has changed me. Right. That is enough.

எனக்குத் தெரியாது. அல்லாஹ்தான் என்னை மாற்றினான். சரியா? இது போதுமானது.

தேசிய வக்ஃபே நவ் செயலர் அஹ்மது அப்துர் ரஹ்மான் சாஹிப் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அல்ஹம்துலில்லாஹ். இது அல்லாஹ் எங்கள் மீது செய்த மாபெரும் அருளும், கருணையும் ஆகும். நிகழ்ச்சியின் அனைத்து நடவடிக்கைகளும் மிகச்சிறந்த முறையில் நடந்து முடிந்துள்ளன. இந்த சந்திப்பிற்கான காத்திருப்பும், அதற்கான ஏற்பாடுகளும் இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே துவங்கி இருந்தன. இந்த வகுப்பிற்கு முழுமையான தயாரிப்பு செய்து அன்பிற்குரிய எஜமானருக்கு முன்னால் இந்த நிகழ்ச்சியின் நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன் வைக்க வேண்டும் என்பது எங்களின் முழுமையான முயற்சியாக இருந்தது. அன்பிற்குரிய எஜமானருக்கு எங்களின் இந்த சிறிய முயற்சி விருப்பத்திற்குரியதாக அமைய அல்லாஹ் அருள் செய்வானாக. ஆமீன்

(அறிக்கை: ஃபஸ்லே உமர் ஃபாரூக், அல்ஃபஸ்ல் பிரதிநிதி, இந்தோநேஷியா – நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை 5 பிப்ரவரி 2021)

*(மல்ஃபூஸாத் தொடர்ச்சி...)*

பணி செய்வதும் இறைவனை கண்ணியப்படுத்துதல் ஆகும். எவர்கள் இந்த ஆற்றல்களை பயன்படுத்துவதில்லையோ மேலும் நாங்கள் இறைவன் மீது நம்பிக்கை வைக்கின்றோம் என்று வாயால் கூறுகின்றார்களோ அவர்களும் பொய்யர்கள் ஆவர். அவர்கள் இறைவனை கண்ணியப்படுத்துவது கிடையாது. இறைவனை சோதித்துப் பார்க்கின்றார்கள். அவனால் வழங்கப்பட்ட ஆற்றல்களையும், வலிமைகளையும் வீணானதாக ஆக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு அவர்கள் அவனது சந்நிதானத்தில் ஏளனமும், அவமரியாதையும் செய்கின்றனர்.

إِيَّاكَ نَعْبُدُ (நாங்கள் உன்னையே வணங்குகிறோம்) என்ற பொருளிலிருந்து அவர்கள் மிகவும் விலகி நிற்கின்றனர். அதன்படி அமல் செய்வது கிடையாது. மேலும் إِيَّاكَ نَسْتَعِينُ (நாங்கள் உன்னிடமே உதவியும் தேடுகிறோம்) என்பதன் வெளிப்பாட்டை விரும்புகின்றனர். இது ஆகுமானதல்ல. எந்த அளவுக்கு முடியுமோ, ஆற்றல் இருக்குமோ காரணிகளின் சலுகைகளை பயன்படுத்த வேண்டும். ஆனால் இந்தக் காரணிகளை தமது இறைவனாகவும், கஷ்டங்களை அகற்றுவதாகவும் ஆக்கிக் கொள்ளக்கூடாது. மாறாக, அந்த ஆற்றல்களைக் கொண்டு பணி செய்ய வேண்டும். பின்னர் அல்லாஹ்வின் பக்கமே குனிந்திருக்க வேண்டும். மேலும் அந்த இறைவன் இந்த ஆற்றல்களையும், வலிமைகளையும் தமக்கு வழங்கியுள்ளான் என்பதற்காக நன்றி கூறி சஜ்தாக்கள் செய்ய வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 333 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad